SSSRI Series 005

சிவாகமச் சிந்தனைகள்

நூலாசிரியர்
வ்யாகரண சிரோமணி, ஶிவாகமச் செல்வர், ஶிவாகம வித்யாரத்னம்
பேரா. ஸே. அருணஸுந்தர குருக்கள், M.A., M.Phil., B.Ed.,

ஸ்ரீமத் ஸ்ரீகண்ட ஶிவாசார்ய ஶோத ப்ரதிஷ்டானம்
காரைக்கால் 609 605.
2012


Computerizing the
Saiva Agamas

SSSRI Serices 005

ஶிவாகமச் சிந்தனைகள்

ஆசிரியர்

வ்யாகரண சிரோமணி, சிவாகம வித்யாரத்னம்

ஶிவஸ்ரீ S. அருணஸுந்தர குருக்கள், M.A., M.Phil, B.Ed.

ஸம்ஸ்க்ருத இலக்கணப் பேராசிரியர்

சென்னை ஸம்ஸ்க்ருதக் கல்லூரி சென்னை

ஸ்ரீமத் ஸ்ரீகண்ட சிவாசார்ய ஶோத பிரதிஷ்டானம்

காரைக்கால் - 609 605

2012

© Srimath Srikanta Sivacharya Research Institute, Karaikal

First Edition : December 2012

Copies : 500

Price :

Typeset :
Sri G. Karthikeya Sivam

Layout :
Dr. M. Raghu

Wrapper Design by :
Sri B. Ganapathy Subramanian

Printed at :
M/s. Harish Printers
Mandaveli, Chennai - 28.

ॐ

ओं श्री सुन्दर गणपतये नमः

शिवमयम्

THE SRIMATH SRIKANTA SIVACHARYA RESEARCH INSTITUTE

(A NOTE ON SSSRI)

By the abounding grace of Sri Parvati – Paramesvara who are the Parental Source of the world and who are at the center of the light emerging from the eternal sound(nada) and by the grace of the lineage of great Acharyas , two Institutions namely Srimath Srikanta Sivacharya Veda Saivagama Vidyapeetam and Samskrita Vikaasa Kendram were established in the year 1996 at Karaikal(of Karaikal District, Union Territory of Puducherry, India). These were established to safeguard and keep alive the Vedas and the Sivagamas and to propagate the Sanskrit, one of the two classical languages of our Bharat and as the wings of Srimath Srikanta Sivacharya Trust. On the background of such establishment were the vital and holy blessings of Sri La Sri Nachiyappa Gnana Desika Swamigal, the Chief Pontif, Koviloor Adheenam, H.H. Sri Sankaracharya Swamigal of Kanchi Kamakoti Peetham ,. the Gurumaha Sannidhanams of the Saiva Adheenams , my

Acharya Sivasri Sundara Gurukkal of Kandamangalam (who is now 106 years old and has been anointed with Purna-abhishekam) and my 'manasika' Guru Sivasri Sabharatna Sivacharyar of Koyambedu(who has attained 'sivasayujya').These Institutions were inaugurated by my beloved mother Mrs. Gnanambal@ Gnana Sundaram, w/o Sivasri Pattu Gurukkal@ Balasubramanya Gurukkal(who has attained 'sivasayujya') of Nitheesvaram, Karaikovilpathu, in the year 1996.

Following this, the publication of "Srikanta Vijayam", a bilingual monthly journal in Tamil and Sanskrit was started by the Trust in the year 1999. Besides, Veda-Sivagama-Samskrita-Saiva-Tamil Conference is being conducted every year under the auspices of the Institutions and the Trust.

Subsequently, "The Srimat Srikanta Sivacharya Research Institute" (Srimat Srikanta Sivacharya Shodha Pratishthanam, as named in Sanskrit) sponsored by the Trust was inaugurated by Sri.L. Ganesan ji in the year 2009, with a motive to print and publish the Mulagamas and the Upagamas which have not yet been brought to light, transcriptions from the bundles of palm-leaves containing such eternal Scriptures and the scripts containing the speeches delivered in the Annual Conferences conducted by the Trust.

As the first venture of the SSS Research Institute, we have taken efforts to publish " Srimat Amsumat Agama", critically edited. The source for such publication is the priceless Hard Disk called "Agama Drive" presented to the Institute by H.H. Sadguru Bodhinatha Veylan Swamigal, Gurumaha Sannidhanam , Kauaii Adheenam, Hawaii, USA(the 163rd Jagadacharya of Nandinatha Sampradaya's Kailasa Parampara). He sponsored the esteemed project of digitizing all the manuscripts available in the French Institute of Indology, Puducherry (IFP) and in the French School of Asian Studies (EFEO), Puducheery. I gratefully remember the day July 16, 2011 on which H.H. Bodhinatha Veylan Swamigal, accompanied by Sri Achraya Arumuganatha Swami and Sri Samnyasin Yoginatha Swami presented the Agama Drive in a grand function held at GRT Grand Hotel, Chennai.

We take pride in thanking heartfully Dr. S.P. Sabharathnam Sivacharyar and Dr.V.Abhirama Sundaram and Dr. S. Shanmukha Sivacharyar (of Sri Kalikambal Temple) who have selected our Vidya Pitham at Karaikal and other Patasalas in Karnataka and Tamilnadu for presenting this Agama Drive as desired by the revered Swamijis of Kauaii Adheenam.

The Institute has already brought out two books "Surya Puja" and "Uparagotsava Vidhih" with Tamil

translation. The inspiration and encouragement given by my intimate friend Sivasri Arunasundaram of Sanskrit College, Mylapore, Sivasri Somasekhara Sivacharyar, Chennai and Dr. T. Ganesan, Research Scholar, IFP, Puducherry for such establishment and publications is endearingly remembered at this juncture.

It is our humble prayer to the Almighty to elevate the SSSRI, Karaikal so as to be on par with G.O.M.L., Chennai, Adyar Library, KSRI, Kannimara Library, Sarasvathimahal of Tanjore and Thiruvavaduthurai, French Institute of Pondicherry, French School of Asian Studies of Pondicherry and the Indian Institute of Indology established by Sri La Sri Nachiyappa Gnana Desuka Swamigal of the Koviloor Math.

Presently, the SSRI is bringing out the following five books:

1. Srimat Amsumat Agama - as my research study
2. Vyakarana Laghu Lekha – as the research study by my dear friend Prof.Sivasri S.Arunasundara Gurukkal
3. Srimat Vijayottara Samhita – as the research study by Dr.K. Mallikeswara Gurukkal
4. Dhyana Ratnavali of Trilocana Sivacharyar – as a research study by Dr.R.Satyanarayan Sharma

and Dr. A.S.A.Sahrma

5. Sivagama Cindanaigal By Prof. Shivasri S.Arunasundara Gurukkal

After the inauguration of the SSRI in 2009, a logo was to be designed for the Institute and I thought of a wide range of designs and formations to give a final shape to symbolize the emergence of the universe from the Causal Cosmic Sound(nada) and the sonic form of the 51 letters as produced by 'damaru' held in the upper right hand of Sri Nataraja in the form 14 sutras beginning from अ इ उण् and ending with हल्. Finally, the present logo was designed so as to depict the emergence of the universe, letters and scriptures. The 'damaru' held in the upper right hand of Sri Nataraja is the source of the emergence of scriptures; the palm leaves represent the written scriptures; the circle denotes the world and the motto " sivaat jnaanam pravartate"(The Agamas and the knowledge thereof come down to us from Lord Siva) written in the Grantha Lipi has been taken from the Svayambhuva Sutra Sangraha. This was suggested by Sivasri Kartikeya Sivam of Thirupparan-kunram, Madurai. With regard to the finalization of logo, my friend Sri Arunasundaram suggested some changes. I record my sincere thanks to Kartikeya Sivam and Arunasunadram. The logo designed in this way was very much appreciated by my wife, sons, students , friends and

the members of the Trust. The logo was very dexterously and exquisitely brought into visible and concrete form by Sri Maniamselvan and his wife Mrs.Janani. My thanks are due to them.

Further, a fitting wrapper for each of the three books – Amsumat Agama, Vyakharana Laghu Lekha and Vijayottara Samhia has also been designed by Sri Maniamselvan.

Typograhy for all these books has been neatly done by my students Sri R. Sabarigirisan, Sri D. Suresh, Sri S.Viswanathan and Sri R. Velavankumar and Sri B. Ganapathy Subramanian, of The Madras Sanskrit College.

I express my sincere thanks wholeheartedly to all those mentioned above who have rendered remarkable service in bringing out these publications on my own behalf and on behalf of the members of the Trust.

Dr. Bala Sarveswara Gurukkal,
M.A., M.Phil., Ph.D.,
Hony. Director
Srimath Srikanta Sivacharya
Research Institute

Karaikal
12.12.2012

H.H. Satguru Bodhinatha Veylanswami
(The 163rd Jagadacharya of Nandinatha Sampradaya's Kailasa Parampara)

Gurumaha Sannidhanam, Kauai Adheenam, Hawaii, US

Many blessings from the Kauai Aadheenam Pitham of the Kailasa Parampara to participants in the December 21, 2012, book release by SS Research Institute Research Institute. We extend our congratulations to the Srimat Srikanta Sivacharya Research Institute and its Founder/Principal Sri Dr. Bala Sarvesvara Gurukkal on publishing a critical edition of Srimat Amsumat Agama and three other publications: Vijayottara Samhita; Vyakarana Laghu Lekha and Dhyana Ratnavali of Trilocana Sivacharyar.

In particular we are pleased to see the digitized Saiva Agama manuscripts from the French Institute of Indology, Puducherry (IFP), and the French School of Asian Studies (EFEO), Puducheery, being put to use to create a new critical edition of a Mulagama. We hope through the blessings of Sivaperuman that this is the first of many such critical editions of Mulagamas, Upagamas and related texts to be published over the next few years by SSS Research Institute and the other Patasalas in Karnataka and Tamilnadu who in July, 2011, received the Agama Drive of digitized manuscripts and have subsequently started transcription work and incorporated these texts in their study curriculum.

Many blessings from the Kailasa Parampara to all who participate in this grand publication release function.

Satguru Bodhinatha Veylanswami
Kauai Aadheenam, Hawaii, USA

மகிழுரை

துக்ளக் ஆசிரியர், திரு.சோ.ராமஸ்வாமி

ஸ்ரீ அருணஸுந்தரம் அவர்களை மட்டுமல்ல அவருடைய தந்தையையும் எனக்கு நன்றாகத் தெரியும். ஆகமம் பற்றியும், பல தத்துவங்களைப்பற்றியும் ஸ்ரீஅருணஸுந்தரம் பெற்றிருக்கும் பாண்டித்யம் வியக்கத்தக்கது. துக்ளக் பத்திரிக்கையில்அவருடைய கருத்துக்களைப் பிரசுரிக்கிற வாய்ப்பு எனக்குச் சில முறை கிட்டியிருக்கிறது.

டெலிவிஷனில் 'எங்கே பிராமணன்' தொடர் ஒளிபரப்பான போது பல சந்தர்ப்பங்களில், அவரிடமிருந்து தேவையான பல விளக்கங்களை நான் பெற்றேன். அந்தத் தொடரைப் பார்த்த பலர் 'இத்தனை விவரங்கள் உனக்கு எப்படி கிடைத்தன' என்று என்னைக் கேட்டதுண்டு. அதற்கு பதில் இதுதான்: நான் அருணஸுந்தரம் அவர்களிடம் அடிக்கடி பேசி பல விவரங்களை அறிந்து கொண்டேன். இன்னமும் இவர் போல ஓரிருவரிடமும் பேசி சில விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். அதனால்தான் அந்தத் தொடரில் ஹிந்து மதம் தொடர்பான பல விஷயங்களை விவரமாகச் சொல்ல முடிந்தது. நான் எத்தனை முறை தொல்லை கொடுத்தாலும் ஸ்ரீஅருணஸுந்தரம் அவர்கள், முகம் சுளிக்காமல் எல்லா சந்தேகங்களையும் நிவர்த்தி செய்து கொண்டு வந்தார். ஸம்ஸ்க்ருதக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றுகிற

ஸ்ரீஅருணஸுந்தரம் ஸம்ஸ்க்ருதத்தில் மட்டுமில்லாமல் தமிழிலும் நல்ல புலமை பெற்று விளங்குகிறார். இன்று தமிழகத்தில் சிவாகமம் பற்றியும், சைவ சித்தாந்தம் பற்றியும் ஆழமாக அறிந்த ஒரு சிலரில் அவரும் ஒருவர்.

இவ்வளவு தகுதிகள் இருந்தும் அவருக்கு இருக்கிற அடக்கம், முழுமையாகக் கற்றறிந்தவர்களிடம் மட்டுமே காணப்படுகிற சிறப்பான குணம். அவர் எழுதியுள்ள இந்த 'சிவாகம சிந்தனைகள்' என்ற நூல் மிகவும் பயனுள்ளதாக விளங்கப் போகிறது என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. 'தீக்ஷை' தொடங்கி ஆகமத் தொடர்புள்ள பல விஷயங்கள் பற்றி அவர் தந்துள்ள விவரங்களும் அளித்துள்ள விவரங்களும் பிரமிக்க வைக்கின்றன.

ஒரு பூஜையின் தொடக்கத்தில் செய்ய வேண்டிய ஐந்து ஶுத்திகளாகட்டும், ப்ரதிஷ்டா முகூர்த்தம் நிச்சியிக்கப்படு வதாகட்டும், மூன்று பாகங்களாகப் பிரிக்கப்படுகின்ற க்ரியை களாகட்டும், இவை போன்ற மற்ற பல விஷயங்களாகட்டும் எல்லாமே ஸ்ரீ அருணஸுந்தரம் அவர்களால் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. தான் தருகிற விளக்கங்கள் அனைத்துக்கும் அவர் தகுந்த ஆதாரங்களையும் தொகுத்துக் கொடுத்திருக்கிறார்.

சில 'காலங்களை' முன் கூட்டியே அறிய முனையும்போது ஜோதிஷ நூல்களுக்கும், ஆகம நூல்களுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் காணப்பட்டால், அந்த வேறுபாட்டுக்கு உரிய காரணமில்லாத நிலையில், ஜோதிஷ நூல்களைவிட ஆகம நூல்களுக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்-என்பது போன்ற பல நுணுக்கமான விஷயங்களை ஸ்ரீ அருணஸுந்தரம் மிக அழகாக எடுத்துரைக்கிறார்.

ஜீர்ணோத்தாரணம் பற்றி அவர் கூறியுள்ள விளக்கங்களையும் வழிமுறைகளையும் படிக்கிறபோது, நமது

கோயில்களில் இவையெல்லாம் உண்மையாகவே இப்படித்தான் நடத்தப்படு கின்றனவா என்ற சந்தேகம் கூட வந்து விடுகிறது. அவ்வளவு விவரங்கள், அவ்வளவு வழிமுறைகள், அவ்வளவு நியதிகள், விதிமுறைகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட விவரங்களை யெல்லாம் மிகவும் துல்லியமாக அறிந்த ஸ்ரீ அருணஸுந்தரம் போன்றவர்கள் இந்தக் காலத்திலும் கூட இருக்கிறார்கள் என்பது, கடவுள் நமக்கெல்லாம் அருளியிருக்கிற ஒரு வரம். சிவாச்சார்யர்கள் என்று குறிப்பிடப்படுக்கின்ற குருக்கள்கள் பலர் இவற்றை அறிந்திருக்கிலாம். சிலர் அறியாமலும் இருக்கலாம். அவர்கள் எல்லோருக்குமே மிகவும் பயன்தரக்கூடிய நூலாக இது அமைந்திருக்கிறது. ஆகம விதிகள் மிகவும் சரியாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டியவை. ஒரு அணு சக்தி நிலையத்தை நிறுவுவதற்கு எவ்வளவு கவனம் தேவையோ, அவ்வளவு கவனமும், அக்கறையும் ஒரு ஆல்யத்தை நிறுவுவதற்கும், அதில் முறைப்படி பூஜை செய்வதற்கும் தேவை என்பது இந்த நூலைப் படித்தால் நன்கு விளங்குகிறது.

'சிவாகமங்களில் சைவசித்தாந்தம்' பற்றியும் ஸ்ரீஅருண ஸுந்தரம் விரிவாக எழுதியிருக்கிறார், 'சைவ சித்தாந்தம்' சிவாகமம் இரண்டையுமே அருளியவர் சிவபெருமான்தான் என்பதை மிகவும் தெளிவாக விளக்கியிருக்கிறார். இந்த கருத்துக்கு ஸூதஸம்ஹிதா வாக்கியம் போன்றவற்றையும், திருமூலரின் திருமந்திரத்தையும் அவர் ஆதாரமாகக் கொடுத்து விளக்கியிருப்பது மிகவும் பொருத்தமாக இருக்கிறது. சிவாகமம், சைவ சித்தாந்தம் இரண்டும் நெருங்கிய தொடர்புடையவைதான் என்பதை அவர் நிலை நாட்டியுள்ள விதம் பாராட்டத்தக்கது. சிவாகமங்களுக்கே கூட சைவ சித்தாந்தம் என்பதும் ஒரு பெயர் என்பதை விளக்கியுள்ள ஸ்ரீ

அருணஸுந்தரம் அதற்குக் கூறியுள்ள 'மரம்' உதாரணம் மிகவும் பொருத்தமாக அமைந்திருக்கிறது.

சிவாகமங்களையும், சைவ சித்தாந்தங்களையும் அருளியவர் ஒருவரே என்பதால், இந்த இரண்டுக்கு மிடையே தத்துவ வேற்றுமை கிடையாது என்பதை ஸ்ரீஅருணஸுந்தரம் அடித்துச் சொல்லியிருக்கிறார். 'சிவஞானபோதம், சிவாகமங்களையே மறு மொழிகிறது என்பது அருளாளர்கள் வாக்கினால் உறுதிப் படுத்தப்படுகிறது' என்று கூறியிருக்கிறார் ஸ்ரீஅருண ஸுந்தரம்.

இதையெல்லாம் வெறும் கருத்துக்களாகச் சொல்லாமல், ஒரு நீதி மன்றத்தில் ஒரு திறமையான வக்கீல் சட்ட நுணுக்கங்களை அலசி வாதங்களை முன் வைப்பது போல், தகுந்த ஆதாரங்களுடன் ஸ்ரீ அருணஸுந்தரம் எடுத்துச் சொல்லியிருக்கிறார். ஆகையால் இவை மறுக்க முடியாத உண்மைகளாக விளங்குகின்றன.

சிவாகமமும், சைவ சித்தாந்தமும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாதவை என்பது போல பலர் பேசி வருகிற இக்காலத்தில், இப்படிப்பட்ட ஒரு அருமையான விளக்கத்தைக் கொடுத்திருக்கும் திரு அருணஸுந்தரம் இந்த நூல் வழியாக சைவ சித்தாந்தத்திற்கும், சிவாகமத்திற்கும், சிவ வழிபாட்டுக்கும் ஒரு மகத்தான கைங்கரியத்தைச் செய்திருக்கிறார். கைங்கர்யம் செய்தவர்களைப் பாராட்டுவதை விட, அவர்களுக்கு நன்றி கூறுவதுதான் பொருத்தமாக இருக்கும். ஸ்ரீஅருண ஸுந்தரம் அவர்கள் நமது நன்றிக்குரியவராகிறார்.

21-11-2011

ஸ்ரீ குருப்யோ நம:

பதிப்புரை

தொன்று நிகழ்ந்ததனைத்தும் உணர்ந்திடு
சூழ்கலைவாணர்களும்-இவள்
என்று பிறந்தவள் என்றுணராத
இயல் பினளாம் எங்கள் தாய் - என்று

நமது பாரத மணித்திருநாட்டின் தொன்மையை போற்றி பாடுகின்றார் மஹாகவி.

''பாரதநாடு பழம்பெரும் நாடு நீர் அதன் புதல்வர் இந்நினைவு அகற்றாதீர்'' என்று நம்மை வேண்டிக் கேட்டுக் கொண்ட மஹாகவியின் வார்த்தைகளை மறந்து, நமது நாடு மற்றும் நமது தர்மத்தின் பெருமைகளை நாம் அறியாமல் இருக்கின்றோம்.

அந்நியர்களால் அடிமைப்படுத்தப்பட்டு இருந்த நாம் விடுதலை பெற்ற பிறகு அந்நிய கலாச்சார மோஹத்தினால் நாமே வலியச்சென்று அந்நியர்களுக்கு அடிமையாகும் நிலையில் இருக்கின்றோம். காரணம் நம்மை பற்றிய நமது கருத்தைவிட நம்மை பற்றிய பிறரது கருத்தையே பெரிதாக மதிக்க துவங்கியது தான்.

ஆன்மீகம், அரசியல், அறிவியல், கலை, பண்பாடு, இயல், இசை, நாட்டியம், மருத்துவம், கணிதம், மொழி, இலக்கணம், இலக்கியம் என்று அனைத்து துறைகளையும் அலசி ஆராய்ந்து இலக்கணம் வகுத்தவர்கள் நம் முன்னோர்கள்.

இவ்வளவு இருந்தும் மேலை நாட்டு மோஹத்தால் நம்மை நாமே தாழ்த்திக் கொண்டிருக்கின்றோம். இந்நிலைமாறி நம்மக்கள் அனைவரும் நமது பெருமைகளை அறிந்து உணர்ந்து தலைநிமிர்ந்து நிற்கின்ற நிலை விரைவில் வரவேண்டும் என்பது எனது பேரவா.

அதற்கு முதல்படி நமது சமய நூல்களை கற்பதேயாகும்.

அவ்வாறு கற்கும் பொழுது, அவற்றுள் கூறப்படுகின்ற சில விஷயங்கள், நமது சிற்றறிவிற்கு முரண்பட்டதாக தோன்றலாம். அப்பொழுது, அவற்றை உடனே தவறு என்று தீர்மானம் செய்துவிடாமல், பொறுமையாக நன்கு ஆராய்ந்து, உண்மையிலேயே அவ்விஷயம் அறிவுக்கு முரணானதா? அல்லது அறிவிற்கு அப்பாற்பட்டதா? என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

THE TEACHINGS OF THE SHASTRAS ARE NOT AGAINST LOGIC, THEY ARE BEYOND LOGIC.

சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ள சில விஷயங்கள் பெரிதும் நம் அறிவுக்கு அப்பாற்பட்டதாகத் தான் இருக்கின்றனவே தவிர, அறிவுக்கு முரணானதாக புறம்பானதாக இல்லை என்பது அடியேனின் அனுபவத்தில் கண்ட உண்மை.

அடியேன், எனது மானசிக குருநாதரான இந்நூலாசிரியர் அவர்கள் நடத்திய ஸத்ஸங்கங்களில், எனது சிற்றறிவுக்கு முரணாகத் தெரிந்த பல விஷயங்கள் எனது புத்திக்கு அப்பாற்பட்டது என்பதை நன்கு அறிந்து கொண்டேன்.

நமது ஸமயத்தைப் பற்றி அவருக்கு இருக்கக் கூடிய அறிவும் தெளிவும் எப்பொழுதுமே வியக்கத்தக்கதாகவே இருக்கும். அவருடன் ஒருமுறை உரையாடினாலே எவரும் அதை நன்கு உணர்வார்கள்.

M.A., M.Phil, B.Ed, வ்யாகரண சிரோமணி ஆகியவை அவர் படித்துப் பெற்ற பட்டங்கள். சிவாகமச் செல்வர், சிவாகம ரத்ன போன்றவை அவரை வந்தடைந்த பட்டங்கள். எங்களைப் பொறுத்தவரை அவர் ஒரு Mobile Saivagama Encyclopedia என்பதில் மாற்றுக் கருத்தே இல்லை.

இதுபோன்ற இன்னும் பலபல பணிகளை அவர் செய்துகொண்டே இருக்க எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு எல்லாவகைகளிலும் அருள்புரிய ப்ரார்த்தனை செய்கிறோம்.

அப்போதிருந்தே அவரது கருத்துக்கள் யாவையும் நூல் மற்றும் ஒலி, ஒளி வடிவங்களில் வெளிக் கொணர்ந்து, அதன் மூலம் நம் மக்கள் அனைவரும் நமது தர்மத்தின் பெருமைகளை அறிந்துகொள்ள உதவ வேண்டும் என எண்ணி இருந்தேன்.

இப்பொழுது அதைச் செய்யக்கூடிய வாய்ப்புக் கிட்டியுள்ளதை எண்ணி இறைவன் திருவருளைப் போற்றி வணங்குகிறேன்.

இந்நூல் வெளிவரக்காரணமாக இருந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரன்புடன்,
க.கார்த்திகேய சிவம்,
சிவாகம அத்யாபகர்,
ஸ்ரீ ஸ்கந்தகுரு வித்யாலயம், திருப்பரங்குன்றம்

உ

ஸ்ரீ குருப்யோ நம:

முகவுரை

அநாதிசைவராகிய பரமேச்வரன் உயிர்களாகிய நம்மேல் கொண்ட பெருங்கருணையின் காரணமாக அருளியவை சிவாகமங்கள்.

அவை ஞானம், க்ரியை, யோகம், சர்யை என நான்கு பாதங்களில், வாழ்க்கையின் குறிக்கோள் என்ன? என்பதையும், அதை அடைவதற்கான வழிமுறைகளையும் தெளிவாக விளக்குகின்றன.

அவ்வாகமங்களை எளிதில் நுழையமுடியாத காடுகள் போன்றவை என்றும், அளவிடமுடியாத மஹாஸமுத்ரம் என்றும் வர்ணிக்கின்றனர் பெரியோர்.

எனவே, ஆசார்யர்கள் பலர் அவ்வாகமங்களில் கூறப்பட்டுள்ள விஷயங்களையெல்லாம் தொகுத்து துணை நூல்கள் பலவற்றை செய்து இருக்கிறார்கள்.

அத்-துணைநூல்களையும் கூட நம்மால் எளிதில் புரிந்துகொள்ள இயலவில்லை. அதனால் தானோ என்னவோ சிவாகமங்கள் போன்ற நூல்களை ஆசார்யரின் உதவியின்றி தன்னிச்சையாகப் படிக்கத் தடை விதித்திருக்கின்றது நமது தர்மம்.

எனவே தான் சாஸ்த்ரங்கள் உபதேச-க்ரமத்தில் பயிற்றுவிக்கப்படுகின்றன. அவ்வகையில் ''சிவாகமச்

சிந்தனைகள்'' என்ற இந்நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரைகளை நான் எழுத எனக்கு தகுதி ஏற்படுவதற்குக் காரணம் எனது ஆசார்யர், சென்னை, கோயம்பேடு, சிவஸ்ரீ K.A. ஸபாரத்ன சிவாசார்யர் அவர்களும், சென்னை, சிவஸ்ரீ V.ஸோமசேகர சிவாச்சார்யர் அவர்களுமே ஆவர்.

இந்நூல் வெளிவரும் இத்தருணத்தில் அவர்கள் இருவரின் சரணாரவிந்தங்களைப் போற்றிப் பணிந்து வணங்குகிறேன்.

இக்கட்டுரைகளுள் சில, பல ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டவை என்பதை வாசகர்கள் கருத்தில் கொள்ள வேண்டுகிறேன்.

இந்நூல் வெளிவரப் பலவகைகளில் உதவிபுரிந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனது பல அலுவல்களுக்கு நடுவிலும், மிகக் குறுகிய காலத்தில் தனது மகிழுரையை வழங்கிய துக்ளக் பத்திரிக்கை ஆசிரியர் உயர்திரு சோ.ராமஸ்வாமி அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கி வெளியிடும் Dr.பால. ஸர்வேஶ்வர ஶிவாசார்யருக்கும், இக்கட்டுரைகள் நூல் வடிவம் பெற அயராது பாடுபட்ட ஶிவஸ்ரீ.க.கார்த்திகேய சிவம் அவர்களுக்கும், பக்கவடிவம் கொடுத்த Dr.M.ரகு அவர்களுக்கும், அச்சகத்தார் திரு. ராமசந்த்ரன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைவருக்கும் திருமயிலை அருள்மிகு ஸ்ரீ கல்பகாம்பிகா ஸமேத ஸ்ரீ கபாலீச்வரப் பெருமானின் திருவருள் பரிபூரணமாக உண்டாகப் ப்ரார்த்திக்கிறேன்

பேரன்புடன்,

ஸே. அருணஸுந்தர குருக்கள்

பொருளடக்கம்

A Ntoe on SSRI iii

மகிழுரை xi

பதிப்புரை xv

முகவுரை xix

தீக்ஷை

சில கேள்விகளும் பதில்களும் 1

தீக்ஷா ஸங்கல்பம் 11

ஶிவபூஜா ஸ்தவம் 13

பூதஶுத்தி 17

முஹூர்த்த நிர்ணயம் 28

அஷ்டாதஶ க்ரயாவளீ 34

ஶிவாலயங்களில் ஜீர்ணோத்தாரணம் 40

ஶிவ தத்வம் 64

ஶவாகமங்களில் ஶைவஸித்தாந்தம் 69

உ

ஸ்ரீ குருப்யோ நம:

ஶிவாகமச் சிந்தனைகள்

ஶ்ரீமச்சைவிகவாஸேப்ய꞉ ஸுஶக்திப்யோ நமோ நம꞉ !
ஸதா ஶிவாத்வவிஶுத்திகாரணேப்யோ நமோ நம꞉ !!

தீக்ஷை

சில கேள்விகளும் பதில்களும்

கேள்வி: ஆசார்யாபிஷேகம் ஆனவர்தான் ஆசார்யாபிஷேகம் செய்துவைக்க வேண்டுமா? அல்லது செய்துகொள்ளும் கர்தாவிற்கு விருப்பமானவர் எவர் வேண்டுமானாலும் செய்துவைக்கலாமா?

பதில்: இன்றளவில் நாம் அனைவரும் “ஆசார்யா-பிஷேகம்” என்ற பெயரில் எந்த நிகழ்ச்சியை செய்து கொண்டிருக்கிறோமோ அது ஒரே ஸம்ஸ்காரமாக= ஒரு சடங்காக இல்லை. மாறாக ஸமய தீக்ஷை, விஶேஷதீக்ஷை, நிர்வாண தீக்ஷை, ஆசார்யாபிஷேகம் என்ற நான்கு ஸம்ஸ்காரங்களை உள்ளடக்கி ஒரே ஸமயத்தில் செய்து வருகிறோம்.

தீக்ஷைகளின் நோக்கம்

இந்த தீக்ஷைகளின் முக்ய நோக்கம் என்ன? என்றால் ஒருவன் ஶைவனாக மாற வேண்டும் என்பதோ, ஶிவ பூஜை செய்ய வேண்டும் என்பதோ,

ஶிவாக்னிகார்யம் செய்ய வேண்டும் என்பதோ, ஶிவாகமங்களைப் படிக்கவேண்டும் என்பதோ, பிறருக்கு தீக்ஷைகளைச் செய்துவைக்கவேண்டும் என்பதோ, ப்ரதிஷ்டாதிகளைச் செய்யவேண்டும் என்பதோ இந்த தீக்ஷைகளின் முக்ய பயன்கள் அல்ல! மாறாக இவை அனைத்துமே "போனஸ்" அல்லது "இலவசப் பரிசு" போன்ற இரண்டாம் பக்ஷப் பயன்களே ஆகும்.

தீக்ஷைகளின் முக்ய நோக்கம்

அப்படியென்றால் இவற்றின் நான்கின் முக்யப் பயன்கள் யாவை? மோக்ஷம். ஒரே மோக்ஷத்திற்கு பல தீக்ஷைகள் எதற்காக? என்றால் தீக்ஷைக்குத் தகுந்தாற் போல் மோக்ஷத்திலும் பேதமுண்டு.

மோக்ஷ பேதங்கள்

ஸமயதீக்ஷை மட்டும் செய்துகொண்டவர்கள் ருத்ர பதத்தையும், விஶேஷதீக்ஷை வரை செய்து கொண்டவர்கள் மஹேஶ்வர பதத்தையும், நிர்வாண தீக்ஷை வரை செய்து கொண்டவர்கள் பரஶிவ பதத்தையும் அடைகிறார்கள்.

ஸாதகாபிஷேகம்,ஆசார்யாபிஷேகம் என்பவற்றைச் செய்துகொண்ட ஸாதகர்களும், ஆசார்யர்களும் கூட ஶிவபதத்தைத் தான் அடைகிறார்கள். தீக்ஷா ப்ரகரணங்களையும் அந்த்யேஷ்டி ப்ரகரணங்களையும் உற்று நோக்கினால் இது நன்கு விளங்கும்.

தீக்ஷைகளின் இரண்டாம்பக்ஷ நோக்கம்

இதுவரை தீக்ஷைகளின் முக்யப் பயன்களாகிய முக்தி பேதங்களைப் பார்த்தோம். இனி இந்த தீக்ஷைகளைச் செய்து கொண்டவர்களுக்கு இவ்வுலகில் இறைவன் இலவசப் பரிசாக அளித்த [1]அதிகாரங்களையும், [2]பொறுப்புகளையும், [3]கடமைகளையும், உரிமைகளையும் இனி பார்ப்போம்.

ஸமயதீக்ஷை மட்டும் செய்து கொண்டவர்களுக்கு, ஶிவபெருமானுடைய பாதங்களை நினைப்பதற்கும், ஶிவபூஜை நடை பெறும் இடத்திற்குச் சென்று கண்டுகளிப்பதற்கும், ஶிவபூஜைக்குப் பணிவிடை செய்வதற்கும், விஶேஷதீக்ஷை செய்து கொள்வதற்கும் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

விஶேஷதீக்ஷை வரை செய்து கொண்டவர்களுக்கு ஸமயதீக்ஷை செய்து கொண்டவர்களின் அதிகாரங்களும், மேலும், ஶிவபெருமானைப் பூஜிப்பதற்கும், ஶிவாக்னியை ஆராதிப்பதற்கும், குருவினைப் பணிவதற்கும், நித்யபூஜையில் வருகிற குருபூஜை ஶிவாகமங்களைக் கேட்டுப் படிப்பதற்கும், (ஶிவாகமங்களின் குறிப்பிட்ட பகுதிகள்) (வரையறைக்குட்பட்டது) தனது நித்ய கர்மாக்களில் ஏற்படும் ப்ராயஶ்சித்தங்களைச் செய்துகொள்வதற்கும், நிர்வாணதீக்ஷை செய்து கொள்வதற்கும் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

---

1. அதிகாரம் = உரிமை
2. பொறுப்பு= உரிமை +கடமை
3. கடமை = செய்ய வேண்டிய கட்டாயம்

நிர்வாணதீக்ஷை வரை செய்து கொண்டவர்களுக்கு ஸமயம் மற்றும் விஶேஷதீக்ஷை செய்து கொண்டவர்-களின் அத்தனை அதிகாரங்களும், மேலும் தனது நைமித்திக கர்மாக்களைச் செய்துகொள்ளும் அதிகாரமும், யோக்யதை இருந்தால் ஸாதகாபிஷேகம் அல்லது ஆசார்யாபிஷேகம் செய்துகொள்ளும் அதிகாரமும் அளிக்கப்பட்டுள்ளது.

ஸாதகாபிஷேகம் செய்து கொண்டவர்களுக்கு,

ஸமயம், விஶேஷம், நிர்வாணம் ஆகிய மூன்று தீக்ஷைகளைப் பெற்றவர்களின் அனைத்து அதிகாரங்களும் அளிக்கப்பட்டாலும்; மந்த்ரங்களை நன்கு உரு ஏற்றி ஸித்தி செய்துகொள்வதே அவர்களின் அபிஷேகத்தின் முக்யப்பணி ஆகும்.

ஆசார்யாபிஷேகம் செய்து கொண்டவர்களுக்கு,

ஸமயம், விஶேஷம், நிர்வாணம் ஆகிய மூன்று தீக்ஷைகளைப் பெற்றவர்களின் அனைத்து அதிகாரங்களோடுமட்டுமல்லாமல், ஸாமான்ய ஸமயீ, விஶேஷ ஸமயீ, புத்ரகன், ஸாதகன் ஆகிய முறையே, மேற்கூறிய நால்வருக்கும் கூட அனைத்து நைமித்திக காம்யபூஜாதிகளையும், தீக்ஷைகளையும், ப்ரதிஷ்டை-களையும் செய்து கொடுக்கும் சிறப்பு அதிகாரமும் அளிக்கப்பட்டுள்ளது:

“𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌯𑍋𑌗𑍍𑌯𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃”

என்பதே இவரின் சிறப்பு ஆகும்; எனவே முக்தியைப் பொறுத்தவரை நிர்வாண தீக்ஷை பெற்றவர், ஸாதகாபிஷேகம் செய்து கொண்டவர், ஆசார்யாபிஷேகம் செய்து கொண்டவர் ஆகிய மூவருக்கும் வேறுபாடு இல்லாவிட்டாலும், இவ்வுலகில் உள்ள அதிகாரங்களைப் பொறுத்த வரை மூவருக்கும் பேதமுண்டு.

ஜாதி பேதத்தால் ஆசார்யரின் அதிகார பேதம்

இந்த நான்கு தீக்ஷைகளும் அதன் அதிகாரங்களும், யோக்யதை உள்ள நான்கு வர்ணத்தார்களுக்கும் பொதுவாக இருந்தாலும், ஆசார்யாபிஷேகம் செய்துகொண்ட ஸாமான்ய ப்ராஹ்மணர்கள், தங்களுக்கும், பிற மூவர்ணத்தவர்-களுக்குமே நைமித்திக தீக்ஷாதிகளைச் செய்து வைக்க அதிகாரம் உள்ளவர்கள்.

அதே போல, ஆசார்யாபிஷேகம் செய்துகொண்ட க்ஷத்ரியர்கள், தங்களுக்கும், பிற அடுத்த இரு வர்ணத்தார்களுக்கு மட்டுமே நைமித்திக பூஜாதிகளைச் செய்துவைக்க அதிகாரம் உள்ளவர்கள்.

அதேபோல, ஆசார்யாபிஷேகம் செய்துகொண்ட வைஶ்யர்கள், தங்களுக்கும், ஶூத்ரர்களுக்குமே நைமித்திக பூஜாதிகளைச் செய்து வைக்க அதிகாரம் உள்ளவர்கள்.

அதேபோல ஆசார்யாபிஷேகம் செய்துகொண்ட ஶூத்ரர்கள், தங்களுக்குள் மட்டுமே நைமித்திக பூஜாதிகளைச் செய்துவைக்க அதிகாரம் உள்ளவர்கள்.

ஆதிஶைவ ஆசார்யர்

இந்த நான்கு தீக்ஷைகளையும் செய்துகொண்ட நான்கு வர்ணத்தார்களுக்கும் இல்லாத ஒரு யோக்யதை ஆசார்யாபிஷேகம் செய்து கொண்ட ஆதிஶைவர்கள், ஶிவப்ராஹ்மணர்கள், ஶிவ த்விஜர்கள், ஶிவவிப்ரர்கள், என்றெல்லாம் அழைக்கப்படும் குருக்கள் பரம்பரைக்கே உண்டு.

அதாவது, ஆசார்யாபிஷேகம் செய்துகொண்ட குருக்களுக்கு, மேற்கூறிய அனைவரின் அனைத்து அதிகாரங்களோடு கூட; பரார்த்த பூஜை என்ற திருக்கோயிலில் பூஜை செய்வதற்கும் அதிகாரம் உண்டு. அதோடு மட்டுமல்லாமல் மற்றுமொரு விஶேஷமும் உண்டு. அதாவது, கௌஶிகம், காஶ்யபம், பாரத்வாஜம், கௌதமம், அகஸ்த்யம் அல்லது ஆத்ரேயம் ஆகிய கோத்ரங்களில் பிறந்த குருக்கள்மார்களுக்கு "ஸாந்தாநிகர்கள்" என்று பெயர்.

ஸாந்தாநிகர்களின் விஶேஷம்

விஶேஷ தீக்ஷை மற்றும் நிர்வாண தீக்ஷை ஆனவர்களுக்கு தம் ஒருவருக்கு மட்டுமே பூஜாதிகளைச் செய்துகொள்ளும் யோக்யதையே உண்டு. செய்து வைக்கும் யோக்யதை கிடையாது என்று முன்பு சொல்லி இருந்தாலும், விஶேஷதீக்ஷை செய்து

கொண்ட ஸாந்தாநிகர்களுக்கும், நிர்வாண தீக்ஷை செய்துகொண்ட ஸாந்தாநிகர்களுக்கும், தீக்ஷை ப்ரதிஷ்டை ஆகிய இரண்டினைத்தவிர பிறவற்றை பிறருக்கும் கூட தானாகவே ஸ்வதந்த்ரமாகச் செய்து வைக்கும் அதிகாரம் உண்டு.

ஆசார்யருக்கு உட்பட்டு ஸாந்தாநிகர்கள் செயல்படுதல்

தீக்ஷை மற்றும் ப்ரதிஷ்டையை ஆசார்யாபிஷேகம் செய்துகொண்ட குருக்கள் பொறுப்பேற்றுச் செய்து வைக்கும் பக்ஷத்தில், மேற்கூறிய, விஶேஷதீக்ஷை செய்துகொண்ட ஸாந்தாநிகர்களும், நிர்வாணதீக்ஷை செய்துகொண்ட ஸாந்தாநிகர்களும் கூட, அந்த தீக்ஷையின் மற்றும் ப்ரதிஷ்டையின் அங்கமாகிய மங்களாங்குரார்பணம், ஹோமம் போன்றவற்றை அந்த ஆசார்ய குருக்களின் ஆணைப்படிக்குச் செய்ய அதிகாரமுள்ளவர்கள் ஆவார்கள். ஸ்வதந்த்ரமாகச் செய்துவைக்க அதிகாரம் கிடையாது.

பிற அனைவரைக் காட்டிலும் ஸாந்தாநிகர்-களுக்குள்ள விஶேஷங்கள் இவ்விரண்டே ஆகும், நிற்க,

தீக்ஷையில் யார் கர்தா?

நாம் பல்வேறு பூஜைகளைச் செய்துகொள்ளும் போது, நமக்கு அதாவது கர்தாவிற்கு விருப்பமான ஒருவரை வரணம் செய்து, அவர் மூலமாக அந்த பூஜைகளைச் செய்து கொள்கிறோம். ஆனால், மேற்கூறிய தீக்ஷைகள் அதுபோலக் கிடையாது. தீக்ஷைசெய்துகொள்ள விரும்பும் ஶிஷ்யன், ஒரு

ஸத்குருவை அடைந்து, தனக்கு தீக்ஷை செய்துவைக்கப் ப்ரார்த்திக்கலாம். ஆனால் அந்த ஸத்குரு, ஶிஷ்யனின் யோக்யதையை பரீக்ஷைசெய்த யோக்யதைக்குத் தக்கவாறு அவனுக்கு தீக்ஷையைச் செய்து வைக்கலாம் அல்லது செய்யாமலும் இருக்கலாம்.

எனவே தீக்ஷைகளைப் பொறுத்தவரை ஸத்குருவே= ஆசார்யரே கர்தாவாகிறார். தீக்ஷை செய்துகொள்ளும் ஶிஷ்யனானவன் ஒரு பஶுவாகவே; ஸம்ஸ்காரம் செய்யத்தக்க ஒரு பதார்த்தமாகவே நிற்கிறான்.

தெ ஜஐ வஶவஃ ஶாஷாஃ ஆாஶி
திஷஹி வாஶிதாஃ[i] !

என்ற வாக்யத்திலிருந்து இதனை உணரலாம். எனவே தான், ஒருமுறை ஒருதீக்ஷையின் தொடக்கத்தில், ஶிஷ்யன் மூலமாக ஆசார்யவரணம் செய்துவைக்க நான் முற்பட்டபோது, எனது ஆசார்யரான, **"ஶாஸ்த்ர சூடாமணி, பேராசிரியர், ஶிவாகமரத்னம், கோயம்பேடு ஶிவஸ்ரீ A.ஸபாரத்ன ஶிவாசார்யர்"**, என்னைத் தடுத்து, **"தீக்ஷையில் ஆசார்யவரணம் செய்யத் தேவையில்லை ஆசார்யர் நேரடியாகவே பூஜைகளைத் தொடங்கலாம்"** எனப் பணித்தார்.

" உக்த ருக்ஷணம் ஶிஷ்யம் ருப்ஹ்வா[ii] "

"கூய ஸஜய விஶெஷாஹ்யாம் ஸம்ஸ்ரதஸ்ய ஸம்வத்ஸரொஷிதஸ்ய ஶிஷ்யஸ்ய ஜுருவாஶிவாகும்

ஶக்திநிவாதஞ்ச ஜ்ஞாத்வா நிவூாணதீக்ஷாஂ விஷயீத[iii]"

அத வாவ ரூஉஷ ரூஹா: " வ்யுஉஂ உறுவாரிவாக: தத: ஶக்திநிவாத: தத: ஶிவெ ஹக்தி:, தத: ஸஂஸாரெ வைராமூஷ, ததொ டிஶிகாவெஷணஷ, தத: அநுவ்யாவணஷ, தஸ்ய வஷ்குயெ ச ததொ தீக்ஷா, தத: வாஶவிஹூதி:, தத: ஶிவக அஹிவஷக்தி:, நிஶ்ரெயஸஷ" இதி[iv].

" ....ஸவீஜ தீக்ஷயா தீக்ஷிதஸ்ய ஶ்ருத ஶிரு மண ரூவாா ஸஂவஹஸ்ய நிஜஶிஷ்யஸ்ய அஹிஷெகஂ கயூாக"[v]

போன்ற வாக்யங்கள் எனது ஆசார்யரின் வார்த்தைகளை உறுதிப்படுத்துகின்றன.

எனவே, கேட்கப்பட்ட கேள்வியில் **"கர்தாவிற்கு விருப்பமானவர்"** என்ற இடத்தில், ஶிஷ்யனை **"கர்தா"** எனக் குறிப்பிட்டதே தவறு. ஶிஷ்யன் கர்தாவாக இல்லாததால் தனக்கு விருப்பமானவரை வரணம் செய்ய ஶிஷ்யனுக்கு உரிமையும் கிடையாது.

எனவே, ஶிஷ்யன் ஸத்குருவைத் தேடி, அலைந்து, அடைந்து, பணிந்த பின்பு, ஆசார்யாபிஷேகம் செய்து கொண்ட ஆசார்யர் ஒருவரே, அவனது யோக்யதைக்குத் தக்கவாறு தீக்ஷையைச் செய்து வைக்கலாம். இதுவே இக்கேள்வியின் பதிலாகும்.

கேள்வி: நாம் ஆசார்யாபிஷேகம் செய்து கொள்ளும் போது ஆசார்யாபிஷேகம் ஆகாத ஒருவர் பூஜைகளையும், ஹோமங்களையும் செய்யலாமா?

பதில்: முதற் கேள்வியின் பதிலிலேயே இதற்கான பதிலும் உள்ளது. அதாவது ஆசார்யாபிஷேகமான ஒருவரே ஆசார்யாபிஷேகம் செய்துவைக்கவேண்டும். நிர்வாணம் அல்லதி விஶேஷதீக்ஷை ஆன ஸாந்தாநிக குருக்கள் அந்த ஆசார்யரின் ஆணைப்படிக்கு பூஜா-ஹோமங்களை வேண்டுமானால் செய்யலாம்.

கேள்வி: ஆசார்யரல்லாதவர் மற்ற பூஜை ஹோமங்கள் மட்டும் செய்து, ஆசார்யாபிஷேகம் ஆனவர் மந்த்ர-உபதேஶம் செய்து, ஶிவபூஜை எடுத்துவைக்கலாமா?

பதில்: முன்னிரண்டு கேள்விகளின் பதில்களிலேயே இந்தக் கேள்விக்கான பதிலும் உள்ளது. அதாவது, தீக்ஷை செய்துவைக்க ஆசார்யாபிஷேகம் ஆனவருக்கே அதிகாரமும், பொறுப்பும் உள்ளது.

03.12.2005

ஐஐஐஐ

1.ஸ்ரீமத் காமிகம்- உத்தரம்-ஸமயவிஶேஷதீக்ஷாவிதி,ச்லோ:51B

2 - க்ரியாக்ரமத்யோதிகா, தீக்ஷாவிதி, பக், 201

3-க்ரியாக்ரமத்யோதிகா-நிர்வாணதீக்ஷாவிதி, பக்-264

4-க்ரியாக்ரமத்யோதிகா-நிர்வாணதீக்ஷாவிதி, ப்ரபா வ்யாக்யானம் பக்-265,266.

5-க்ரியாக்ரமத்யோதிகா-ஆசார்யாபிஷேக விதி, பக்-369

𑌉

𑌶𑍍𑌰𑍀 𑌗𑍁𑌰𑍁𑌭𑍍𑌯𑍋 𑌨𑌮𑌃

𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑌃

𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑌃 𑌪𑌰𑌿𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌯𑌾, 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌿𑌤𑌮𑌨𑌸𑍍𑌕𑌂, 𑌸𑌤𑍍𑌸𑌙𑍍𑌗𑌨𑌿𑌰𑌤𑌮𑍍, 𑌅𑌸𑌤𑍍𑌸𑌙𑍍𑌗 𑌪𑌰𑌾𑌙𑍍𑌮𑍁𑌖𑌂, 𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌾𑌭𑌿𑌰𑌤𑌂, 𑌶𑌾𑌨𑍍𑌤𑌂, 𑌕𑌾𑌲𑍇𑌨 𑌸𑍁𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌂, 𑌸𑌹𑌿𑌷𑍍𑌣𑍁𑌂, 𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌸𑌦𑌾 𑌗𑍁𑌰𑍋𑌃 𑌅𑌨𑍁𑌰𑌕𑍍𑌤𑌂, 𑌶𑌿𑌵𑌶𑌕𑍍𑌤𑌿𑌗𑍁𑌣𑍈𑌃 𑌸𑍍𑌵𑌸𑍍𑌥𑌂, 𑌵𑌿𑌨𑍀𑌤𑌂, 𑌪𑍍𑌰𑌿𑌯𑌵𑌾𑌦𑌿𑌨𑌮𑍍, 𑌅𑌕𑍍𑌰𑍋𑌧𑌨𑌂, 𑌨 𑌚𑌪𑌲𑌂, 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾𑌨𑌂, 𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌮𑍍, 𑌅𑌨𑍁𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌮𑍍, 𑌅𑌕𑍍𑌰𑍂𑌰𑌂, 𑌸𑍍𑌵𑌾𑌚𑌾𑌰 𑌪𑌰𑌿𑌪𑌾𑌲𑌕𑌮𑍍 𑌆𑌗𑌮𑌾𑌦𑌿 𑌵𑌿𑌹𑌿𑌤 𑌲𑌕𑍍𑌷𑌣 𑌲𑌕𑍍𑌷𑌿𑌤𑌂 𑌶𑌿𑌷𑍍𑌯𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾,

𑌵𑌿𑌹𑌿𑌤 𑌆𑌵𑌶𑍍𑌯𑌕𑌸𑍍𑌯 𑌸𑍍𑌨𑌾𑌤𑌸𑍍𑌯 𑌨𑌿𑌰𑍍𑌵𑌰𑍍𑌤𑌿𑌤 𑌦𑌿𑌨𑌕𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯 𑌸𑌿𑌤𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑍋𑌤𑍍𑌤𑌰𑍀𑌯𑌸𑍍𑌯 𑌶𑌿𑌵𑌪𑌾𑌦𑌪𑌦𑍍𑌮 𑌦𑌿𑌦𑍃𑌕𑍍𑌷𑍋𑌃 𑌚𑌾𑌰𑌿𑌵𑌾𑌰𑌿𑌤𑌸𑍍𑌯 𑌶𑌾𑌨𑍍𑌤𑌸𑍍𑌯 𑌆𑌗𑌮𑌾𑌦𑌿 𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌕𑌾𑌲𑌿𑌕 𑌲𑌕𑍍𑌷𑌣 𑌲𑌕𑍍𑌷𑌿𑌤𑌸𑍍𑌯 𑌶𑌿𑌷𑍍𑌯𑌸𑍍𑌯 𑌅𑌨𑍁𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌸𑍍𑌯

𑌸𑍍𑌨𑌾𑌨𑌾𑌚𑌮𑌨𑌾𑌦𑌿𑌷𑍁 𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑌾 𑌆𑌪𑌾𑌦𑌨𑌾𑌯, (𑌅𑌧𑌿𑌕𑌾𑌰 𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇,) 𑌨𑌿𑌤𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮 𑌅𑌰𑍍𑌹𑌤𑌾 𑌆𑌪𑌾𑌦𑌨𑌾𑌯, 𑌶𑌿𑌵𑌚𑌰𑌣 𑌸𑍍𑌮𑌰𑌣 𑌅𑌰𑍍𑌹𑌤𑌾 𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇, 𑌶𑌿𑌵𑌯𑌾𑌗 𑌪𑍍𑌰𑌵𑍇𑌶 𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑌾 𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇, 𑌶𑌿𑌵𑌪𑍂𑌜𑌾 𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌾𑌯𑌾𑌮𑍍 𑌅𑌧𑌿𑌕𑌾𑌰 𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇, 𑌵𑌿𑌶𑍇𑌷 𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌯𑌾𑌂 𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌯𑍇 𑌚 𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯 𑌸𑌮𑌯 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌾𑌖𑍍𑌯 𑌸𑌮𑌯𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌮𑍍,

𑌶𑌿𑌵𑌪𑍂𑌜𑌨 𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑌾 𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇, 𑌶𑌿𑌵𑌾𑌗𑍍𑌨𑍍𑌯𑌾𑌰𑌾𑌧𑌨 𑌅𑌰𑍍𑌹𑌤𑌾 𑌅𑌵𑌾𑌪𑍍𑌤𑌯𑍇, 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌰𑍍𑌹𑌣𑌾 𑌅𑌧𑌿𑌕𑌾𑌰 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌯𑍇, 𑌶𑌿𑌵𑌾𑌗𑌮 𑌪𑌠𑌨 𑌅𑌰𑍍𑌹𑌤𑍍𑌵 𑌆𑌪𑌾𑌦𑌨𑌾𑌯, 𑌸𑍍𑌵𑌨𑌿𑌤𑍍𑌯 𑌨𑍈𑌮𑌿𑌤𑍍𑌤𑌿𑌕 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌕𑌰𑌣 𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑌾 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌯𑍇,

𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣 𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌯𑌾𑌂 𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑌾 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇 𑌚 𑌵𑌿𑌶𑍇𑌷 𑌸𑌮𑌯𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌾𑌖𑍍𑌯 𑌵𑌿𑌶𑍇𑌷𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌃,

𑌸𑌮𑌯𑌵𑌿𑌶𑍇𑌷 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌸𑍍𑌯, 𑌯𑌥𑌾𑌕𑌾𑌲𑌮𑌨𑍁𑌷𑍍𑌠𑌿𑌤𑌸𑍍𑌯, 𑌸𑍍𑌵𑌨𑍈𑌮𑌿𑌤𑍍𑌤𑌿𑌕 𑌕𑌾𑌰𑌣𑌾𑌦𑌿 𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑌾 𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇, 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌚𑌨𑌾𑌯𑌾𑌂 𑌵𑌿𑌚𑌾𑌰 𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑌾 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌯𑍇, 𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌨𑍍𑌧𑌕𑍀𑌭𑍂𑌤 𑌮𑌲 𑌮𑌾𑌯𑌾 𑌕𑌰𑍍𑌮 𑌤𑌿𑌰𑍋𑌧𑌾𑌨 𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌿𑌨𑍍𑌯𑌾𑌖𑍍𑌯 𑌪𑌾𑌶 𑌪𑌞𑍍𑌚𑌕 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌯𑍇, 𑌶𑌿𑌵𑌜𑍍𑌞𑌾𑌨 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇 𑌚, 𑌪𑌾𑌶 𑌶𑌿𑌵𑌾 𑌦𑌮𑌨𑌾𑌨𑌿𑌤𑌾𑌂, 𑌨𑌿𑌰𑌤𑌿𑌶𑌯 𑌪𑌰𑌮𑌾𑌨𑌨𑍍𑌦 𑌶𑌿𑌵𑌪𑌦 𑌪𑍍𑌰𑌾𑌪𑌿𑌕𑌾𑌂, 𑌶𑌿𑌵𑌶𑌕𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌦𑌿𑌕𑌾𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌃,

𑌤𑍍𑌰𑌿𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌾𑌦𑌾𑌂 𑌭𑍁𑌕𑍍𑌤𑌿 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿 𑌫𑌲𑌪𑍍𑌰𑌦𑌾𑌂 𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑌤𑌃, 𑌸𑌬𑍀𑌜 𑌦𑍀𑌕𑍍𑌷𑌯𑌾 𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌸𑍍𑌯, 𑌶𑍍𑌰𑍁𑌤 𑌶𑍀𑌲 𑌗𑍁𑌣 𑌆𑌚𑌾𑌰 𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌸𑍍𑌯, 𑌨𑌿𑌜 𑌶𑌿𑌷𑍍𑌯𑌸𑍍𑌯, 𑌸𑍍𑌵𑌪𑌰 𑌸𑌕𑌲 𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 𑌅𑌧𑌿𑌕𑌾𑌰 𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇, 𑌅𑌵𑌿𑌚𑍍𑌛𑌿𑌨𑍍𑌨 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯 𑌪𑌰𑌂𑌪𑌰𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌯𑍇, 𑌦𑍀𑌕𑍍𑌷𑌾 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌦𑌿 𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌤𑍍𑌵 𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇, 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌭𑌿𑌷𑍇𑌕𑌾𑌖𑍍𑌯 𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌞𑍍𑌚 𑌵𑌿𑌹𑌿𑌤 𑌕𑌾𑌲𑍇 𑌵𑌿𑌹𑌿𑌤 𑌦𑍇𑌶𑍇 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ।

𑌶𑌿𑌷𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌨𑌾

𑌶𑍍𑌰𑍀𑌶𑍈𑌵𑌕𑌾𑌰𑍍𑌯𑍋𑌦𑍍𑌧𑍂𑌤
𑌶𑌿𑌵𑌾𑌜𑍍𑌞𑌾 𑌪𑌰𑌿𑌪𑌾𑌲𑌕 ।
𑌸𑌮𑌯𑌾𑌦𑌿 𑌪𑍍𑌰𑌵𑍇𑌶𑌾𑌯
𑌤𑌵𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌮𑍁𑌪𑌾𑌗𑌤𑌃 ॥

𑌦𑍀𑌕𑍍𑌷𑌯𑌾 𑌶𑌿𑌵𑌦𑍇𑌹𑌤𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇 𑌚 𑌜𑌗𑌦𑍍𑌵𑌤𑍈𑌃 ।
𑌪𑌾𑌦𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌯𑌂 𑌸𑍍𑌵𑍀𑌕𑌾𑌰𑌾𑌰𑍍𑌥𑌾𑌦𑌰𑍇𑌣 𑌤𑌾𑌃 ॥

𑌶𑌿𑌵𑌃

ஸ்ரீ குருப்யோ நம:

ஶிவபூஜா ஸ்தவம்

ஶிவாகமங்கள் ஶிவபூஜா முறையை விளக்குபவை. அந்த ஶிவாகமங்களை நமக்கு நன்கு விளங்கவைக்க **தூர்வாஸர்** முதலான ஆசார்யர்கள் ஆகம ஸாரமாய்ப் பதினெட்டு **பத்ததிகளை** வழங்கினர்.

இவற்றைத் தவிரவும் பலர் பல வழிகளில் ஶிவாகமங்கள் நமக்கு விளங்க உதவி புரிந்துள்ளனர். அவர்களுள் ஸ்ரீமத் ஜ்ஞானஶம்பு ஆசார்யர் என்பவரும் ஒருவர். இவர் "**ஶிவபூஜா ஸ்தவம்**" என்ற ஒரு அற்புதமான நூலை இயற்றியுள்ளார். இவர் சோழநாட்டினைச் சேர்ந்தவர். இதனைச் "**சோல தேஶீச ஸூரி:**" என்ற இவரது வாக்கால் அறிய முடிகிறது.

ஶிவபூஜா ஸ்தவம் என்ற இந்நூல் ஶிவபூஜையை முறைப்படி விளக்குவதன் வாயிலாக ஶிவபெருமானைத் துதிப்பதாக அமைந்துள்ளது. எனவே **ஶிவபூஜா ஸ்தவம்** எனப் பெயர் பெற்றது. ஆனால் ஆசிரியர் இந்நூலை "**ஶம்போ: பூஜா ஸ்தோத்ரம்**" என்றே குறிப்பிடுகிறார்.

ஶிவதீக்ஷை பெற்ற மனிதன் தனது ஆத்மார்த்த பூஜையை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதனை சுமார் 46 ஶ்லோகங்களில் குறிப்பாக உணர்த்துவதாக இந்நூல் அமைந்துள்ளது. பூஜையின் அரிய தத்வங்களும் ஆங்காங்கே விளக்கப்பட்டுள்ளன.

ஶிவதீக்ஷை பெற்றவன் காலையில் எழுந்தது முதல் ஶிவபூஜை வரை என்னென்ன செய்ய வேண்டும் என்பதைப் பெயரளவில் தெரிவிப்பதாக முதல் ஶ்லோகம் அமைந்துள்ளது. எனவே இந்நூலின் பொருளடக்கம் போன்று முதல் ஶ்லோகம் அமைந்துள்ளது எனலாம்.

இரண்டு முதல் ஆறு வரையிலான ஐந்து ஶ்லோகங்களில் ஶைவஸந்த்யாவந்தனத்தின் ரஹஸ்யப்பொருளும், நான்கு கால ஸந்த்யா வந்தனமும் விளக்கப்படுகிறது.

ஏழு முதல் பதிமூன்று வரையிலான ஏழு ஶ்லோகங்களில் பஞ்சஶுத்திகளும் அதன் தத்வங்களும் விளக்கமாகவும் குறிப்பாகவும் உணர்த்தப்படுகின்றன.

பதிநான்கு, பதினைந்து, பதினாறு ஆகிய மூன்று ஶ்லோகங்களில் ஶிவ ஆஸன பூஜை விளக்கப்பட்டுள்ளது. பதினேழாவது ஶ்லோகத்தில் ஶிவாஸனம் மற்றும் மூர்த்தியின் வ்யாப்தியைக் கணக்கிட்டுக் கூறுகிறார் ஆசிரியர்.

பதினெட்டு முதல் இருபத்தைந்து வரையிலான எட்டு ஶ்லோகங்கள் ஶிவனது மூர்த்தி, த்யானம், வித்யாதேஹம் ஆகியவற்றை நயம்பட உரைப்பதாக அமைந்துள்ளன.

இருபத்தாறு முதல் முப்பது வரையிலான ஐந்து ஶ்லோகங்கள் ஈஶானாதி அஷ்டத்ரிம்ஶத்கலா ந்யாஸங்களை இறைச்சிப் பொருளாய்க் குறிப்பதாக அமைந்துள்ளன.

முப்பத்தைந்து முதல் முப்பத்தியொன்பது வரையிலான ஐந்து ஶ்லோகங்கள் ஆவாஹனம் முதலிய பத்து ஸம்ஸ்காரங்கள், ஹ்ருதயாதி ந்யாஸங்கள் மற்றும் அவற்றின் தத்வங்கள் ஆகியவற்றை விளக்குகின்றன.

நாற்பது முதல் நாற்பத்திமூன்று வரையிலான மூன்று ஶ்லோகங்கள் அபிஷேகம் முதலிய உபசாரங்கள், லயாங்க போகாங்க பூஜை மற்றும் தத்வங்கள் ஆகியவற்றை விளக்குகின்றன.

நிறைவாக நாற்பத்திமூன்று, நாற்பத்தி நான்கு, நாற்பத்தி ஐந்து (அல்லது நாற்பத்தி ஆறு) ஆகிய ஶ்லோகங்கள் முறையே நித்ய பவித்ரம் சாற்றுதல், ஜபம் செய்தல், பராங்முகார்க்யம் கொடுத்தல் ஆகியவற்றை தத்வத்துடன் விளக்குகின்றன.

பிறகு நாற்பத்திஆறு அல்லது நாற்பத்திஏழாவது ஶ்லோகத்தில் நூலாசிரியராகிய ஸ்ரீமத்ஜ்ஞானஶம்பு ஆசார்யர் ஶிவபெருமானின் கட்டளைப்படி இந்த பூஜாஸ்தோத்ரத்தைச் செய்து முடித்துள்ளேன் என்று குறிப்பிடுகிறார்.

இந்த ஶிவபூஜா ஸ்தவமானது ஆத்மார்த்த பூஜா முறையை ரத்னச்சுருக்கமாகவும், தெளிவாகவும், முறையோடும் விளக்குகிறது. ஶிவபூஜையைச் ஸிம்ஹாவலோகனம் போன்று மேலோட்டமாக அறியவிரும்புபவர்களுக்கு இந்நூல் அரியதொரு வரமாகும். மிகவும் முடியாத சூழ்நிலையில் ஶிவபூஜையைச் செய்ய முடியாதவர்கள் இப்பவித்ரமான ஸ்தோத்ரத்தைப் பாராயணம்

செய்தால் மானஸிகமாக ஶிவபூஜையை முறையோடு செய்த பலனும் கிடைக்கும், ஶிவபெருமானை 46 ஶ்லோகங்களால் ஸ்துதி செய்த பலனும் கிடைக்கும்.

ஶிவதீக்ஷை பெற்ற ஶைவ அன்பர்கள் யாவரும் இவ்வரிய ஸ்தோத்ரத்தைப் படித்தும், பாராயணம் செய்தும், உணர்ந்தும் ஶிவானுக்ரஹத்தைப் பெருதல் வேண்டும்.

ஶிவம் ஶிவகரம் ஶாந்தம்
ஶிவாத்மானம் ஶிவோத்தமம் !
ஶிவமார்க ப்ரணேதாரம்
ப்ரணதோஸ்மி ஸதாஶிவம் !!

ஶுபம்

ஸ்ரீ குருப்யோ நம:

[4]பூத ஶுத்தி

பஞ்ச ஶுத்திகள்

ஒவ்வொரு பூஜையின் தொடக்கத்திலேயும் "பஞ்ச ஶுத்தி" (ஐவகை ஶுத்தி) என்பது மிகவும் முக்கியமானது.

"யோ வேத்தி பஞ்சஶுத்தீஶ்ச ஸ பூஜாம் கர்த்துமர்ஹதி"[i] |

"ஆத்மஶுத்தி க்ரியாபூர்வா
ஸ்தாநஶுத்திர் த்விதீயகா |
த்ருதீயா த்ரவ்யஶுத்தி: ஸ்யாச்
சதுர்த்தம் மந்த்ரஶோதநம் ||

பஞ்சமீ லிங்கஶுத்திஶ்ச[ii]
கதிதா பஞ்சஶுத்தய: " |

அவை

1.ஆத்ம ஶுத்தி (பூத ஶுத்தி)
2.ஸ்தான ஶுத்தி
3.த்ரவ்ய ஶுத்தி
4.மந்த்ர ஶுத்தி[5]
5.லிங்க (பிம்ப) ஶுத்தி, என்பன ஆகும்.

---

4. ஸ்ரீமத் அகோர ஶிவாசார்யாரின் 'க்ரியா க்ரம த்யோதிகையில் உள்ள ஒரு பக்ஷத்தைத் தழுவி பெரும்பாலும் இக்கட்டுரை அமைந்துள்ளது.

5. ஸ்ரீமத் பூர்வகாரணம், ஸ்ரீமத் குமாரதந்த்ரம் ஆகியவற்றின் 'நித்யார்ச்சநவிதி' யில் லிங்க (பிம்ப) ஶுத்தி நான்காவதாகவும், மந்த்ர ஶுத்தி ஐந்தாவதாகவும் உள்ளது.

1. ஆத்ம (பூத)ஶுத்தி

ஐவகை ஶுத்திகளுள் முதலாவதான இந்த ஶுத்தி, சில இடங்களில் பூத ஶுத்தி என்றும், சில இடங்களில் ஆத்ம ஶுத்தி என்றும், குறிக்கப்படும். பூத ஶுத்தி என்பது ஆத்ம ஶுத்திக்கு ஒரு அங்கமே ஆகும் இதை "ப்ரபா" என்னும் வ்யாக்யானத்தில் காணலாம்.

"ஆத்மஶுத்தி க்ரியா ப்ரோக்தா"[iii]

"ப்ராச்யா பூதஶுத்தி: ஸ்ம்ருதா"[iv]

"தத்ர ப்ராச்யம் ஆத்மஶுத்த்யங்கத்வேன தத்வா: தத்ஸ்ம்ருதா பூதஶுத்த்யங்கயஜன ஹோமஸமாதி ஸமாஹாராத்மகத்வாத்,"[v]

பூத ஶுத்தி,[6]அந்தர்யஜநம்,[7]ஹோமம், [8]ஸமாதி ஆகிய நான்கும் சேர்ந்ததே ஆத்ம ஶுத்தி ஆகும். இவ்விடத்தில் ஆத்ம ஶுத்தி என்பதற்கு 'ஆன்மாவின் ஶுத்தி' எனப் பொருள் கொள்வதை விட ஆன்மா சார்ந்துள்ள உடலை ஶுத்தம் செய்வது எனப் பொருள் கொள்வது சிறந்தது.

2. ஸ்தான ஶுத்தி

நாம் இருக்கும் இடத்தை ஶுத்தம் செய்வது ஸ்தான ஶுத்தி ஆகும். பூஜை செய்யும் இடத்தில் உள்ள துஷ்ட க்ரஹங்களை விரட்டுதல், இடையூறுகளைப் போக்குதல், எதிரிகள் எளிதில் நுழையாதவண்ணம்

6.இதயகமலத்தில் இறைவனை பூஜிப்பதே அந்தர்யஜநம்.

7.நாபியை (தொப்புள்) குண்டமாக நினைத்து அதில் பாவனையாக ஹோமம் செய்தல்

8.புருவமத்தியில் இறைவனை நினைத்துத் தன்மயமாதல்

நம்மைச் சுற்றி நெருப்புமயமான ப்ராகாரத்தை உண்டாக்குதல், மூன்று விதமான அகழிகளை ஏற்படுத்துல், ஶக்திகளை காவலுக்கு வைத்தல் ஆகிய சடங்குகள் ஸ்தான ஶுத்தியில் இடம் பெறும்.

3.த்ரவ்ய ஶுத்தி

பூஜைக்குரிய பொருள்களில் உள்ள மலாம்ஶத்தை நீக்கி, மந்த்ரமயமாக்கி, இறைவன் ஏற்பதற்கு உகந்ததாகச் செய்வதே த்ரவ்ய ஶுத்தி ஆகும்.

4. மந்த்ர ஶுத்தி

“ஸஸ்ரு ஷாஜூஃ ஶிவஃ ஶாஸ்து
ஸஂஹிதெதுஹியீயதெ”।[vi]

மந்த்ரங்கள் பல், முகவாய்க்கட்டை, உதடு முதலிய அங்கங்களிலிருந்து வெளிப்படுகின்றன. எனவே மாயையின் ஸம்பந்தத்தால் அவை அஶுத்தமான படியால், ஶக்தியற்றவையாகின்றன. ஆதலால் ஆகமங்களில் முக்கியமானவைகளான ஸம்ஹிதா மந்த்ரங்கள் பன்னிரெண்டும் ஶுத்தம் செய்யப்படுகின்றன.

5. லிங்க (பிம்ப) ஶுத்தி

லிங்கத்தில் பூஜை செய்யும் பொழுது ‘லிங்க ஶுத்தி’ என்றும், உருவமுடைய ஶிலைகளில் பூஜிக்கும் பொழுது ‘பிம்ப ஶுத்தி’ என்றும் கூறப்படும்.[9]

9.*காண்க : பூர்வகாரணாகமம் , ஸ்ரீமத் குமார தந்த்ரம் - நித்யார்சன விதி படலம்

பூஜைகளில் புஷ்பம், அக்ஷதை போன்றவற்றின் வாயிலாக, பிம்பங்களில்(இறைவனிடத்தில்) மந்த்ரங்கள் வைக்கப்படுகின்றன. (இறைவனிடத்திலிருந்து புஷ்பம், அக்ஷதை போன்றவற்றை எடுத்தால், அதில் உள்ள மந்த்ரங்களும் வெளியே வந்து விடுகின்றன.) பூஜைகளின் முடிவில் பூஜகர் மந்த்ரங்களை தன்னுள் அடக்கிக் கொள்கிறார். எனவே, மந்த்ரமற்ற ஶூன்யமான விக்ரஹங்களை துஷ்டக்ரஹங்கள் சூழ்ந்து கொள்கின்றன. பூஜகர், போகத்தையும் மோக்ஷத்தையும் அடையாவண்ணம் அவை இடையூறுகளைச் செய்கின்றன. எனவே அவற்றை விரட்டி, மீண்டும் மந்த்ரங்களை ந்யாஸம் செய்து (வைத்து) வழிபாடு செய்ய உகந்ததாக விக்ரஹத்தைச் செய்வதே லிங்க (பிம்ப) ஶுத்தி ஆகும்.

“ஷவம் கூஜதெ வூவவூ வூஜாஸஶாவஹ்ள ஶ்ரீஜவீம விநூஸ்த உஷூ உவஸம்ஹாராநஷாம் ஶ்ரீஜவீமயொஃ ஞூஸஷூாஃ வூஜகஸூ ஹூக்ஷி ஶூக்ஷி வூதிஙபாஙக விஷ்நாஃ நிரஸ்தா ஹவஷி”[vii]

பூத ஶுத்தி-சொல் விளக்கம்

பூதங்களின் ஶுத்தி பூத ஶுத்தி. இங்கு பூதங்கள் என்பதற்கு, ‘பூத-ப்ரேத-பிஶாச’ என்று உள்ள, துஷ்ட கணங்களுள் ஒன்றான பூதங்களாகப் பொருள் கொள்ளக் கூடாது. நிலம், நீர், நெருப்பு, காற்று , ஆகாயம் என்ற ஐந்திற்கும், பூதங்கள் என்று பெயர். அவைகளை ஶுத்தி செய்வதையே இங்கு ‘பூத ஶுத்தி’ என்னும் சொல் குறிக்கும்.

“வரயிவலாவவஸ்தயா தெஜஃ வாய¯ாாகாய
வாவஹி । வாதாநி வஞ்ஹ¯தாநி” ॥

பூத ஶுத்தியின் அவஶ்யம்

ஶாதாவிதரஶொஹீ¯தை
ஷஹெ ஷாத¯ம் ந ய¯ஜ்ஜெ।
தஷாநஞ்ஶய: காய:
க்ரியதெ வ்ருதிவாஷாழ॥[viii]

நம் உடல், மேற்கூறிய ஐந்து பூதங்களால் ஆனது. தாய் தந்தையரின் மலத்திலிருந்து உண்டானதால் மேலும் அஶுத்தமானது. எனவே, இவ்வுடலில், அஶுத்தமே வடிவானதில் இருந்து கொண்டு, நாம் நிர்மலமான, நித்தமும் புனிதமான ஶிவனைப் பூஜிப்பது என்பது ஒவ்வாத ஒன்று. எனவே, நம் உடலை =ஐந்து பூதங்களைப் புனிதப் படுத்துவதே பூத ஶுத்தி ஆகும். உலகில் கூட தினமும் நாம், எந்த நபர்களைச் சந்திக்கின்றோமோ, அவர்களுக்குத் தக்கவாறு நம் வேஷங்களை மாற்றிச் செல்கிறோம். இல்லையேல் காவலாளிகள் போன்ற இடையூறுகள் மேலிட, எண்ணியவரைச் சந்திக்க முடியாமல் போகிறது. எனவே, அனைத்துப் பூஜைகளின் தொடக்கங்களிலும், நிர்மலனான மந்த்ர வடிவினனான இறைவனைப் போலவே, நாமும் நிர்மலர்களாகவும், மந்த்ர வடிவினர்களாகவும் ஆவது அவஶ்யம்.

கண்களுக்குப் புலப்படாமல் உள்ள அஶூத்தங்களை நீக்கவே, பூத ஶூத்தி செய்யப்படுகிறது. இதற்கு முன்னதாகவே நம் உடலில் உள்ள, கண்ணுக்குப் புலப்படும், கண், காது போன்ற அனைத்து உறுப்புகளிலும் உள்ள அஶூத்தங்களை ஸ்நானம் போன்றவற்றால் நீக்கி, பின்பே பூத ஶூத்தியைச் செய்ய வேண்டும்.

இறைவனின் வலது புறத்தில் வடக்கு முகமாக அமர்ந்து இதைச் செய்ய வேண்டும்.

பூதஶூத்தியைச் செய்யும் முறை

நமக்கு ஸூக்ஷ்ம ஶரீரம், ஸ்தூலஶரீரம் என இரண்டு உடல்கள் உள்ளன. இவ்விரண்டையும் ஶூத்தம் செய்யுங்கால் ஜீவனுக்கு ஆபத்து நேரிடக்கூடாது என்பதால் ஜீவனை த்வாதஶாந்தத்தில் முதலில் சேர்கக வேண்டும். பிறகு ஸூக்ஷ்ம-ஸ்தூல ஶரீரங்களை ஶூத்தம் செய்ய வேண்டும்.

ஶப்தம், ஸ்பர்ஶம், ரூபம், ரஸம்,கந்தம், மனஸ், புத்தி, அஹங்காரம் என்ற 8 தத்வங்களால் ஆனது ஸூக்ஷ்ம ஶரீரம். நம் உடலில் ஐந்து இடங்களில் உள்ள ப்ரம்ஹா முதலியவர்களிடம், இந்த 8 தத்வங்களை அர்ப்பணிப்பதே ஸூக்ஷ்மதேஹ ஶூத்தியாகும். அதன் விவரம்

தேவதை	வீற்றிருக்கும்இடம்	விடவேண்டிய தத்வம்
ப்ரம்ஹா	ஹ்ருதயம்	ஶப்தம், ஸ்பர்ஶம்
விஷ்ணு	கழுத்து	ரஸம்
ருத்ரன்	முகவாய்க்கட்டை	ரூபம், கந்தம்
ஈஶ்வரன்	புருவமத்தி	புத்திம்,அஹங்காரம்
ஸதாஶிவன்	ப்ரம்ஹரந்த்ரம்	மனஸ், (பிந்து)

ஸ்தூல தேஹ ஶுத்தி

வெளியில் தெரியும் நமது ஶரீரமே ஸ்தூலதேஹம் ஆகும். இது ஐந்து பூதங்களால் ஆனது. இவை ஐந்தும் குற்றம் உடையன. பூஜைக்காலங்களில் இவை ஐந்தும் இடையூறு செய்கின்றன. எனவே இவை ஐந்தையும் செயலற்றுச் செய்ய என்ன வழி? ஆகமங்கள் இவ்வாறு கூறுகின்றன. ஐந்து பூதங்களுள், ஒன்றுக்கொன்று விரோதமாக சில உள்ளன. அதாவது, நிலம்-காற்று, நீர்-நெருப்பு ஆகியவை ஒன்றுக்கொன்று விரோதமானவை. எனவே, ஒரு குறிப்பிட்ட பூதத்தின் இடங்களை, மற்றொரு எதிர்பூதம் நிரப்பிக் கொண்டதாக பாவிக்க வேண்டும். அதாவது உடலில், ரத்தம், சிறுநீர் போன்றவை நீரின் அம்ஶங்கள், அவற்றை, எதிர் பூதமான நெருப்பு ஆக்ரமித்ததாக எண்ண வேண்டும். இவ்வாறு செய்வதால் அனைத்து பூதங்களும் செயலிழந்து இடையூறு செய்யா வண்ணம் இருக்கின்றன.

*மேற்கூறியவாறு செய்ய வேண்டும் என்றால், முதலில் அந்தந்த பூதங்களின் ஸ்வரூபத்தை அறிதல் அவஶ்யம். எனவே முதலில் அதைப் பார்ப்போம்.

*	நிலம்	நீர்	நெருப்பு	காற்று	ஆகாயம்
நிறம்	மஞ்சள்	வெண்மை	சிகப்பு	கருப்பு	புகைவண்ணம்
தன்மை	கடினம்	மென்மை	மேல்நோக்கு	உருவமின்மை	ஶூன்யம்
அடையாளம்	வஜ்ரம்	தாமரை	ஸ்வஸ்திகம்	ஆறுபுள்ளிகள்	அடையாளம்,அற்றது
பீஜம்	லம்	வம்	ரம்	யம்	ஹம்
தேவதை	ப்ரஹ்மா	விஷ்ணு	ருத்ரன்	ஈஶ்வரன்	ஸதாஶிவன்
மந்த்ரம்	ஸத்யோஜாதம் ஹ்ருதயம்	வாமதேவம் ஶிரஸ்	அகோரம் ஶிகை	தத்புருஷம் கவசம்	ஈஶானம்நேத்ரம், அஸ்த்ரம்
கலை	நிவ்ருத்தி	ப்ரதிஷ்டா	வித்யா	ஶாந்தி	ஶாந்த்யதீதா
குணங்களின் எண்ணிக்கை	5	4	3	2	1
உத்காதமந்த்ரம்	ஹ்லாம்	ஹ்வீம்	ஹ்ரூம்	ஹ்யைம்	ஹௌம்
மண்டல வடிவம்	சதுரம்	அர்த்தசந்த்ரம்	முக்கோணம்	ஷட்கோணம்	வட்டம்

மேலே குறிப்பிட்டவாறு ஒவ்வொரு பூதங்களையும் தியானிக்க வேண்டும். ஒரு பூதத்தை தியானித்த பிறகு, அதற்கு உரிய உத்காத மந்த்ரத்தை, அதனதன் குணங்களின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு கூற வேண்டும். அதாவது நிலத்திற்கு ஐந்து குணங்கள். எனவே ஐந்து முறை உத்காத மந்த்ரத்தைக் கூற வேண்டும். இவ்வாறு செய்வதால் அவற்றின் குணங்கள் நீங்குகின்றன.

பின்பு அவற்றை வேற்று-பூதங்கள் வ்யாபிக்கும் பொழுது அவை அனைத்தும் செயலிழந்து இருக்கும் பொழுது, கால் கட்டை விரலில் உள்ள நெருப்பினால் உடலை எரிக்க வேண்டும். அப்பொழுது உடலில் உள்ள தோஷங்கள் எரிந்து விடுகின்றன. பின்பு த்வாதஶாந்தத்தில் தலைகீழாக உள்ள தாமரையிலிருந்து பெருகும் அம்ருத தாரையால் உடலை நனைத்தல் வேண்டும். ஆத்மாவை (ஜீவனை) மறுபடியும் [10]த்வாதஶாந்தத்திலிருந்து கொணர்ந்து ஹ்ருதயத்தில் அமர்த்த வேண்டும். பின்பு மறுபடியும் அந்த ஆத்மாவிற்கு அம்ருதாபிஷேகத்தைச் செய்ய வேண்டும்.

இப்பொழுது நம் ஶரீரம் மலமற்றதாகவும் அம்ருதமயமாகவும் உள்ளது. இவ்வாறு உள்ள ஶரீரத்தில் மந்த்ரங்களை ந்யாஸம் செய்து நம் உடலை நிர்மலமாகவும் மந்த்ரமயமாகவும் செய்வதே பூத ஶுத்தியாகும்.

---

10. ஶிகையின் மேல், பனிரெண்டு அங்குலத்தின் முடிவு 'த்வாதஶாந்தம்' எனப்படும்.

பூத ஶுத்தியின் பயன்.

ஸமய தீக்ஷை ஆனவர்கள், தீக்ஷையில் அவர்களுக்கு[11] உபதேஶிக்கப்பட்ட மந்த்ரங்களை ஜபம் செய்து, ஸித்தி[12] செய்ய வேண்டும். ஆனால் அவர்களுடைய இந்த்ரிய ஶக்திகள் அவ்வாறு செய்யவிடாமல் தடுக்கின்றன. எனவே, அவர்கள் பூத ஶுத்தியைச் செய்தால், இடையூறு செய்யும் ஶக்திகள் செயலிழந்து போகும்.

[13]விஶேஷ தீக்ஷை ஆனவர்கள், ஶிவபூஜை, ஹோமம் போன்றவற்றைச் செய்யும் பொழுது மேற்கூறிய இடையூறுகள் மேலிடாமல் இருக்க, பூத ஶுத்தியைச் செய்ய வேண்டும்.

வினைகளைக் களைவதின் மூலம், பாஶம் என்ற ஶிகையை நீங்க வைத்து, ஶிவத்துடன் சேர வழி செய்யும் [14]நிர்வாண தீக்ஷையை செய்து கொண்டவர்கள் கூட, நித்தமும் பூதஶுத்தியைச் செய்யத்தான் வேண்டும். ஏனெனில், தீக்ஷையில் அவர்களுடைய ஸஞ்சிதவினை, ஆகாமிவினை ஆகிய இரண்டு மட்டுமே நீக்கப்பட்டன.

11.ஶிவபூஜைக்குப் பணிவிடை செய்யும் தகுதியை ஏற்படுத்தும் சடங்கு ஸமயதீக்ஷை ஆகும்.

12.உபதேஶமாய் பெறப்பட்ட மந்த்ரங்களைக் குறிப்பிட்டவாறு ஜபம் செய்து அவற்றை செயல்திறன் கொண்டதாகச் செய்வது, "ஸித்தி செய்வது எனப்படும்.

13.ஶிவபூஜை செய்து கொள்வது, ஹோமம் செய்வது கொள்வது, ஶிவாகமங்களைப் படிப்பது ஆகிய தகுதிகளைத் தர வல்லது விஶேஷ தீக்ஷை.

14. வினைகளை நீக்கி, ஶிவபதம் அளிப்பது நிர்வாண தீக்ஷை.

ப்ராரப்த வினையை தினமும் அனுபவித்தே தீரவேண்டும். அதை அனுபவிக்கும் பொழுது உண்டாகும் வாஸனை, அதைத் தொடரும் மல-மாயாம்ஶங்கள் ஆகியவற்றை சிறிது-சிறிதாக அழிக்க பூத ஶுத்தியை அவஶ்யம் செய்ய வேண்டும்.

மேலும், ஆதவனின் கதிர்கள் எங்கும் பரவியிருப்பினும், ஸூர்யகாந்த மணியின் கண் புகும் போது, நன்கு உணரப் படுவது போல, அனைத்து இடத்திலும் ஶிவத்தன்மை பரந்து கிடப்பினும், பூத ஶுத்தி செய்யப்பட்ட உடலில் நன்கு விளங்குகிறது என்பது ஆகமங்களின் தீர்மானம்.

ஙஙஙஙை

i. க்ரியாக்ரமத்யோதிகா, ப்ரபா வ்யாக்யா, பக்- 59
ii. ஸ்ரீமத்காமிகாகம:, பூர்வபாக:, அர்ச்சன விதி படல: ஶ்லோ-37, பக்-26
iii. ஸ்ரீமத்காமிகாகம:, பூர்வபாக:, அர்ச்சன விதி படல: ஶ்லோ-37, பக்-26
iv. ஸித்தாந்த ஶேகர:, ஶிவார்ச்சனம், ஶ்லோ-99, பக்-32
v. க்ரியாக்ரமத்யோதிகா, ப்ரபா வ்யாக்யா, பக்- 59
vi. க்ரியாக்ரமத்யோதிகா, ப்ரபா வ்யாக்யா, பக்- 15
vii. ஶிவார்சன சந்த்ரிகா, லிங்க சுத்தி:, பக்- 41
viii. ஸித்தாந்த ஶேகர:, ஶிவார்ச்சனம், ஶ்லோ-105, பக்-33

உ

ஸ்ரீ குருப்யோ நம:

முஹூர்த்த நிர்ணயம்

அநாதி ஸைவராகிய பரமேஸ்வரனால் ஆன்மாக்களின் மேல் கொண்ட அன்பினால் அருளப்பட்டவை ஆகமங்கள்.

வெஷா மஊ ஐயா வெ்ராஜுஊ கூயி ஷெஹெந வாவ ூதி ||

என்ற பார்வதியைக் குறித்த வசனத்தால் இதை உணரலாம். தனது அருவ நிலையின் உபாஸனையின் பொருட்டு ஞானபாதத்தினையும், அருவுருவ, உருவவழிபாட்டின் பொருட்டு பிற மூன்று பாதங்களையும் ஆகமங்களில் அருளிய இறைவன், ஆன்மாக்களின் விருப்பத்திற் -கேற்ப **“சிந்தாமணி”** கல்போன்று அந்தந்த வடிவம் கொள்கிறார். அதாவது,

ஓிக ாலூாஓி கூநவஜூிஷ கூநஷ ஷிநூாது- உூதூயெ||

என்று பர்த்ருஹரி கூறியபடி, திசைகள், காலங்கள், போன்ற எவைகளாலும் பிரிக்கப்படாத, உட்படுத்தப்படாத இறைவன், அவைகளுக்கு உட்பட்டது போலக் காட்சியளிக்கும் நிலைகளே அருவுருவ உருவ நிலைகள்.

இறைவனின் இந்நிலைகளை நாம் அனுபவிக்கப் பெரும் துணையாய் நிற்பது கால தத்வமே ஆகும். காலத்திற்கெல்லாம் அப்பாற்பட்ட இறைவனை ஓரிடத்தில் காலங்களைக் கொண்டு நிலைநிறுத்த

ஶிவாகமங்களில் உபதேஶிக்கப்பட்டவையே ப்ரதிஷ்டா முஹூர்த்தங்கள்.

ஒரு நூற்கண்டில் சுற்றப்பட்ட நூல், அதன் தொடக்கம் முதல் இறுதி வரை எவ்விதப் பாகுபாடு-மின்றி ஒன்றாகவே இருப்பது போல கால தத்வமும் ஸ்ருஷ்டி முதல் லயம் வரை எவ்விதப் பிரிவுமின்றி ஒன்றாகவே உள்ளது. இருப்பினும், மேற்கண்ட நூலில் பல்வேறு வண்ணங்கள் பூசப்பட்டால், அவ்வண்ணங்களின் பேதம் காரணமாய், நூலிலும் எவ்வாறுபேதம் உணரப்படுகிறதோ, அதுபோல விண்ணில் உள்ள க்ரஹ நக்ஷத்ரங்களின் ஸஞ்சாரங்களுக்கேற்ப, அவற்றின் பேதம் காலபேதமாய் கொள்ளப்படுகிறது. அக்-க்ரஹங்களில் முக்யமாய் மிளிரும் **'ஜ்யோதிஷ்'** க்ரஹங்களாகிய ஸூர்ய, சந்த்ரர்களை மையமாக வைத்துக் காலத்தைப் பேசுவதாலேயே காலநூல்களுக்கு **'ஜ்யௌதிஷம்'** என்ற பெயர் வந்தது. இறைவனும் கால வடிவம் கொண்டே நம் கர்மங்களுக்கு ஸாக்ஷியாய் நிற்கிறான் என்பதை

கூாஞூாதூநா கூயா ஜெவ யஜூரஷூ ஜாஜகெ வியள । என்ற பவித்ர ஶ்லோகத்தால் அறியலாம். எனவே எவ்விதப் பிரிவுமற்ற காலம்; ஸ்திதி என்ற நடைமுறையில் பல்வேறு பேதங்களையுடையதாய் இருப்பதால், அவற்றுள் எந்த காலபேதத்தில், அதாவது எந்த காலத்தில் ப்ரதிஷ்டை என்ற கடவுள் மங்களத்தைச் செய்யவேண்டும் என்று விளக்கு-பவையே ப்ரதிஷ்டா முஹூர்த்த விதிகள். இவ்விதிகள் ஆகமங்களில், பல்வேறு படலங்களில் சிதறியுள்ளன.

ஜ்யௌதிஷ நூல்களிலும் இவ்விதிகள் காணப்படுகின்றன.அவற்றுள் சில மாறுபட்டக் கருத்துக்களும், விஶேஷ விஷயங்களும் காணப்படும். அதுபோல முரண்பட்ட விஷயங்களில் எவ்வாறு முடிவெடுக்கப்பட வேண்டும் என்பதை நாம் ஶாஸ்த்ரங்களில் விரிவாகக் காணலாம்.

அவற்றுள் சிலவற்றைக் காண்போம்:

ஆர்த்ரா நக்ஷத்ரம்

திருவாதிரை எனும் ஆர்த்ராவை, ப்ரதிஷ்டையின் பொருட்டு பூர்வகாரணம் எடுக்கவில்லை. உத்தரகாரணகமமோ 'ஸர்வநாஶம்' என்ற விபரீத பலனைக் கூறுகிறது. ஆனால் பூர்வ காமிகமோ ஶிவனுக்கு உகந்ததாகக் கூறும்.

இதுபோல பூரம், விசாகம், பூராடம், அவிட்டம், பூரட்டாதி ஆகிய நக்ஷத்ரங்கள் உத்தர காமிகத்திலும், சில காலாம்ருதத்திலும் எடுக்கப்பட்டுள்ளன.ஆனால் இப்பக்ஷத்திற்கு பெரும்பான்மை இல்லை என்பதை உணர்ந்து வேறுவழியில்லாத ஸமயத்தில் இப்பக்ஷத்தை எடுத்துக்கொள்வது சாலச்சிறந்தது.

மேலும், பூர்வகாமிகம்-காலவிதிப் படலம் அனைத்துக் காலங்களுக்கும் பொதுவானதா அல்லது வாஸ்து ஸம்பந்தப்பட்டது மட்டுமா என்பது ஆராயப்படவேண்டிய ஒன்றாகும்.

மேலும், தக்ஷிணாயனத்தை பூர்வகாரணம், உத்தரகாரணம், காலாம்ருதம் ஆகியவை குறிப்பிடாவிட்டாலும், பூர்வகாமிகம், ஶ்ராவணம்

(ஆவணி), ஆஶ்வயுஜம் (ஐப்பசி), கார்த்திகம் (கார்த்திகை) ஆகிய மாதங்களை மத்யமபக்ஷமாகக் குறிப்பிடுகிறது. ஆனால்அம்மாதங்கள் சாந்த்ரமான-மாகக் கூறப்பட்டுள்ளனவா! ஸௌரமானப்படியா? என்பதை வேறு சில ஆகமங்களுடன் ஒப்பிட்டுத் தீர்மானிக்கவேண்டும். இதுபோல உத்தரகாரணமும் மேற்கூறிய மூன்று மாதங்களை ப்ரதிஷ்டைக்கு உகந்ததாகக் குறிப்பிடுகிறது.

பக்ஷ விஷயத்தில் மூன்று பக்ஷங்கள்

1. ஶுக்ல பக்ஷத்தை ஸ்வீகரித்து, க்ருஷ்ண பக்ஷத்தைத் தவிர்ப்பது ஒருபக்ஷம். இதனைப் பூர்வகாரணத்தில் காணலாம்.

2. ஶுக்லபக்ஷத்தையும், க்ருஷ்ணபக்ஷத்தில் ஸப்தமி வரையும் ஸ்வீகரிப்பது ஒருபக்ஷம். இதனைப் பூர்வ காமிகத்தில் காணலாம்.

3. பூர்வகாமிகம் க்ருஷ்ணபக்ஷத்தினையும் சேர்த்து உத்தம பக்ஷம், மத்யம பக்ஷம் என இருவிதமாக விளக்குகிறது. இதனைக் கீழ்க்காணும் வரை படத்தில் காணலாம்.

அதமம்	மத்யமம்	உத்தமம்	மத்யமம்	அதமம்
1 2 3 4 5	6 7 8 9 10	11 12 13 14 (15) 1 2 3 4 5	6 7 8 9 10	11 12 13 14 (15)
க்ருஷ்ணபக்ஷதிதிகள்....................		....(பௌ)............	ஶுக்லபக்ஷதிதிகள்...........	(அமா)

இதுபோல ஞாயிறு, செவ்வாய், சனி ஆகிய கிழமைகளை பூர்வகாரணம் நிந்தித்தாலும், உத்தரகாரணம் ஸுகமளிப்பதாகக் கூறுகிறது. இருப்பினும் குறிப்பிட்ட நக்ஷத்ரங்கள் சேர்ந்தால் மேற்கூறிய கிழமைகளிலும் ப்ரதிஷ்டை செய்யலாம் என பூர்வகாரணத்திலேயே காணலாம்.

மேலும் ஶூலம், கண்டம், வ்ருத்தி ஆகிய யோகங்களை பூர்வகாரணம் நிந்தித்தாலும், உத்தரகாரணம் அவற்றிற்கான சிறப்புப் பயன்களையே கூறுகிறது.

இதுபோல சரராஶிகளை பூர்வகாமிகம் ஒட்டு மொத்தமாகத் தடுத்தாலும், உத்தரகாரணம் மேஷம், கடகம், துலாம் ஆகிய சர லக்னங்களுக்குச் சிறப்புப் பலன்களைக் கூறி உகந்ததாகவே குறிப்பிடுகிறது. ஆனால் உபய ராஶியாகிய தனுர் லக்னத்தினை பூர்வகாமிகம் நிந்தித்தாலும், உத்தர- காரணம் 'ஞானம் பெறுதலை' அதன் பயனாகக் குறிப்பிடுகிறது.

மேலும் முஹூர்த்த நிர்ணயம் செய்ய முற்படும் பொழுது, காலவிஷயங்களைக் கூறுகின்ற அனைத்துப் பகுதிகளிலும் உள்ள உகந்த காலங்களையும், தகாத காலங்களையும் பிரித்து அறியவேண்டும், அதிலும், முதலில் வருடங்கள், பிறகு அயனங்கள், பிறகு அயனங்களுக்குட்பட்ட மாதங்கள், சாந்த்ரமான மாதங்கள், பக்ஷங்கள்,பக்ஷங்களிலும் பல பக்ஷங்கள், பிறகு திதிகள், வாரங்கள், நக்ஷத்ரங்கள், யோகங்கள், கரணங்கள், ராசிகள்,(லக்னங்கள்) பிறகு வேளைகள், லக்னத்திற்கேற்ப க்ரஹ நிலைகள் என்ற முறையில் அனைத்துப் பகுதிகளையும் ஒப்பிடவேண்டும். அதன் பின்பு மூன்று வித காலச்சேர்க்கையை ஒப்பிட வேண்டும் அதாவது, வாரமும் நக்ஷத்ரமும் சேர்ந்தால் எழும் பலன், வாரமும் திதியும் சேர்ந்ததின் பலன், திதியும் நக்ஷத்ரமும் சேர்ந்தபலன் ஆகிவற்றை ஆராயவேண்டும்.

இவை அனைத்திற்கும் மேலாக சீரானதாய் அமையாத காலங்களாகிய க்ரஹணம், அஸ்தமனம்,

தூமகேது, எரிநக்ஷத்ரம் விழுதல் போன்ற காலங்களை முன்கூட்டியே ஒப்பிட்டறிய வேண்டும்.

இவ்வாறு ஒப்பிட்டறியும்போது ஆகம-ஜ்யோதிஷ நூல்களுக்குள், வேறுபாடும், நேரெதிர் கருத்துக்களும் காணப்பட்டால், அவ்வேறுபாட்டிற்கு வேறு ஏதேனும் காரணம் உள்ளதா என்பதை ஆராய்ந்து அதற்குத் தகுந்தாற்போல் பொருள் காணவேண்டும். வேறு காரணம் காணப்படாதபோது ஜ்யௌதிஷ நூல்களைவிட ஆகமநூல்களுக்கே ப்ராமாண்யம் அளிக்கப்படவேண்டும். ஆகமங்களுக்குள்ளேயே வேறுபட்ட கருத்து காணப்பட்டால் அவ்விரு கருத்துக்களையும் முரண்பட்டதாகக் கொள்ளாமல் விகல்பமான இருபக்ஷமாகக் கொள்ளவேண்டும்.

எனவே ப்ரதிஷ்டைக்கான காலங்கள் ஆகமங்களில் முரண்பட்டே காணப்படுகின்றன எனப் பொருள் கொள்ளாமல் முரண்பட்டது போலக் காணப்படும் காலங்கள் இரண்டாம் வகையில் எடுத்துக்கொள்ளத் தக்கவையே, அவ்வாறு எதிலும் முரண்பாடு இல்லாதவை உத்தமமானவை எனத் தீர்மானிக்க வேண்டும்.

ஒன்றேயாயினும் பலவாறாகக் காக்ஷியளிக்கும் காலதத்வத்தின் ஸூக்ஷ்மத்தை அளப்பது அவ்வளவு எளிதல்ல எனினும் ஸ்ரீமத் காமிகம் போன்ற ஆகமநூல்களின் படி சிற்சில தோஷங்கள் இருப்பினும், கூடியவரை குணம் அதிகம் உள்ள நாளைத் தேர்ந்தெடுப்பதே இறைவனின் சித்தமாகும்.

𑌯𑌜𑌮𑌾𑌨𑌾𑌨𑍁𑌕𑍂𑌲𑍇𑌷𑍁 𑌸𑍍𑌵𑌲𑍍𑌪𑌦𑍋𑌷𑍇 𑌗𑍁𑌣𑌾𑌧𑌿𑌕𑍇।

[illegible]

ஶ்ரீ குருப்யோ நம:

அஷ்டாதஶ க்ரியாவளீ

ஶிவபெருமானைப் பரமாகவைத்துப் பேசும் நூல்களே ஶிவாகமங்கள் ஆகும். ஶிவாகமங்கள் இருபத்தெட்டிலும் இறைவனை வழிபடும் முறையை விளக்கும் பகுதியே க்ரியா பாதம் எனப்படும்.

க்ரியாபாதத்தில் க்ரியைகளுக்குத் தான் (சடங்குகளுக்குத் தான்) முதலிடம் அளிக்கப்படும். அப்பகுதியில் பரார்த்த ஆலயங்களில் (திருக் கோயில்களில்) அனுஷ்டிக்கவேண்டிய க்ரியைகள் மூன்றுபாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

அவை:-

1. **கர்ஷணாதி ப்ரதிஷ்டாந்தம்**
2. **ப்ரதிஷ்டாதி உத்ஸவாந்தம்**
3. **உத்ஸவாதி ப்ராயஶ்சித்தாந்தம்**

என்று கூறப்படுகின்றன.

கர்ஷணாதி ப்ரதிஷ்டாந்தம்

கர்ஷணம் என்றால் உழுதல் என்று பொருள். ப்ரதிஷ்டா[15] என்றால் (இறைவனை) சிறப்புற விளங்கச்

---

15. "ப்ரகர்ஷேண திஷ்டதி 'அநயா ப்ரக்ரியயா ஶிவ இதி ப்ரதிஷ்டா" என்று ப்ரதிஷ்டா எனும் சொல்லுக்கு விளக்கம் அளிப்பர் . அதாவது எங்கும் நீக்கமற நிறைந்து, கடந்தும் உள்ளும் இருப்பவர் கடவுளாகிய ஶிவபெருமான்-எனவே ப்ரதிஷ்டாவிற்கு முன்பே இறைவன் ஆலயங்களிலும் சிலைகளிலும் நிறைந்து இருப்பினும், எந்தச் சடங்கினால் சிறப்புற விளங்குகிறாரோ அதற்கு ப்ரதிஷ்டா எனப் பெயர்.

செய்தல் என்று பொருள். எனவே "**உழுதல் 'முதற்கொண்டு இறைவனை சிறப்புற விளங்கச் செய்தல் வரையிலான சடங்குகளை விளக்கும் பகுதி கர்ஷணாதி ப்ரதிஷ்டாந்தம்**" எனப்படும்.

புதியதாகத் திருக்கோயில் அமைப்பதன் பொருட்டுப் பூமியை உழுது, பரீக்ஷை செய்து அடிக்கல் நாட்டுதல் முதலியவற்றைச் செய்யவேண்டும். அதுவே இங்கு கர்ஷணம் எனக் கூறப்பட்டது.

கர்ஷணம் என்ற சொல்லுக்கு ஆகர்ஷித்தல் என்ற பொருளும் உண்டு. எனவே இறைவனை ஆகர்ஷணம் செய்வது முதற்கொண்டு, ப்ரதிஷ்டை செய்வது வரையிலான க்ரியைகளுக்கும் கர்ஷணாதி ப்ரதிஷ்டாந்தம் என்ற சொல் பொருந்தும். அதாவது திருக்கோயில் அமைப்பதற்கு இறைவனை ஶிலையில் வடிக்க வேண்டும். அவ்வாறு வடிப்பதற்கு ஶிலை (கருங்கல்)தேவை. எனவே ஆசார்யர், ஸ்தபதி, அரசன் ஆகியோர் மலையை நோக்கிச்சென்று மலையை ஶிவவடிவாகத் த்யானித்து ஶிலை வடிப்பதற்குத் தகுந்த கற்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

பின்பு ஸ்வப்னத்தில் இறைவனின் உத்தரவின்படி அவற்றுள் ஒன்றினைத் தேர்ந்தெடுத்து, அந்தக்கல்லில் உள்ள மந்த்ர வடிவான இறைவனை ஒரு கலஶத்தில் ஆகர்ஷிக்கவேண்டும்.பின்பு மேற்கொண்டு கல்லினைக் கூறுசெய்தல் போன்றவற்றைச் செய்ய வேண்டும்.

இங்கு நாம் கவனிக்கவேண்டியது என்னவென்றால் "**அங்கு உள்ளார், இங்கு உள்ளார்**" என்று இல்லாமல் எங்கும் பரவிக் கருங்கல்லிலும் உள்ள

இறைவனை மந்த்ர வடிவினனாக=மந்த்ராத்மாவாக மாற்றி, அக்கல்லிலிருந்து கலஶத்திற்கு இழுத்தல் (ஆகர்ஷணம் செய்தல்) என்பது **"இறைத்தன்மையை எவரும் உண்டாக்குவதில்லை சடங்குகளின் மூலம் அவை வெளிப்படுத்தப்படுகின்றன என்ற தத்வமே"** ஆகும்.

எனவே திருக்கோயில் அமைப்பதற்கு **"இறைவனை ஆகர்ஷித்தல்"** என்னும் சடங்கே முதலில் நடைபெறுவதால், **கர்ஷணாதி ப்ரதிஷ்டாந்தம் என்னும் சொல்லுக்கு "இறைவனை ஆகர்ஷிப்பது முதற்கொண்டு ப்ரதிஷ்டை செய்வது வரை என்ற பொருளும் பொருந்தும்"**. வாமதேவ பத்ததி என்ற நூலிலிருந்து இதனை நாம் அறியலாம்.

கர்ஷணாதி ப்ரதிஷ்டாந்தம் என்ற க்ரியைகள் ஆகமங்களில் பலவிதமாகக்கூறப்பட்டுள்ளன. க்ரியைகளுக்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் உள்ளதோ அதைவிட க்ரியைகளின் க்ரமத்திற்கு-வரிசைக்கு-முறைமைக்கு முக்கியத்துவம் அதிகம்.

ஏனெனில் பக்தியை மட்டுமே முதலாகக் கொண்டு இறைவனை வழிபடுபவர்களும், [கண்ணப்பர் போன்றவர்] இறைவனுக்கு அபிஷேகம் செய்தல், மலர் அணிவித்தல் போன்ற அனைத்துக் க்ரியைகளையும், இறைவன்பால் உள்ள தூய அன்பின் காரணமாகச் செய்யலாம். ஆனால் அவர்கள் செய்யும் க்ரியைகளுக்கு முன் பின் முறை கிடையாது. கர்ம மார்கத்தில் நின்று

வழிபடுபவர்களுக்கோ க்ரியைகளை விட க்ரியைகளின் வரிசை=முறைமை மிக மிக முக்யமானது.

மூல ஆகமங்களில் பெரும்பாலும் க்ரியைகள் தான் விளக்கப்பட்டுள்ளனவே தவிர, க்ரியைகளின் வரிசை ஐயமற விளக்கப்படவில்லை. எனவே அதனை விளக்குவதற்காகவே பதினெண் பத்ததி ஆசிரியர்கள் அரும்பாடுபட்டுப் பத்ததிகளை இயற்றினார்கள். [16]**"க்ரியா க்ரம த்யோதிகா"**, [17]**"க்ரியா காண்ட க்ரமாவளீ"** போன்ற பத்ததிகளின் பெயர்களே இதனை நன்கு விளக்கும்.

திருக்கோயில் அமைத்துப் பின்பு இறைவனைப் ப்ரதிஷ்டை செய்வதற்கானக் க்ரியைகளை, பல பத்ததி ஆசிரியர்கள் பலவிதமாகப் பிரித்தும், பலவிதமாக வரிசைப்படுத்தியும் உள்ளனர். அவை ஒவ்வொன் றிற்கும் எந்தெந்த ஆகமங்கள் ப்ரமாணம் என்பதை நாம் கண்டறிவது மிக மிகக் கடினமாகும்.

வாமதேவ பத்ததி என்ற நூலின் ஆசிரியர் இந்தப் புதிய கும்பாபிஷேகக் க்ரியைகளை **சதுஷ்ஷஷ்டி க்ரியா மாலா** எனப்பெயரிட்டு அறுபத்திநான்கு க்ரியைகளாகப் பிரித்துள்ளார்.

மற்றும் ஒரு [18]நூலில் ப்ரதிஷ்டா அனுக்ரமணி எனும் பெயரில் முப்பது வகையான க்ரியைகளாகவும்,

---

16. ஸ்ரீமத் அகோர ஶிவாசார்ய பத்ததி

17 ஸ்ரீமத் ஸோம ஶம்பு பத்ததி

18. ஶிவலிங்க ப்ரதிஷ்டா விதி, ஆசிரியர், அச்சுவேலி ஶிவஸ்ரீ குமாரஸ்வாமி குருக்கள்.

அதே நூலில் 42 க்ரியைகளாகவும், 130 க்ரியைகளாவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அஷ்டாதஶ க்ரியாவளீ
(பதினெண் பூசைவரிசை)

மேற்கூறியவை அனைத்தையும் சுருக்கி **"அஷ்டாதஶ க்ரியாவளீ"** என்னும் பெயரில் பதினெட்டுக் க்ரியைகளாகப் பிரித்துள்ளனர் பெரியோர். இந்த அஷ்டாதஶ க்ரியாவளியும் நமக்கு இருவிதமாகக் காணக்கிடைக்கின்றன. ஆனால் இவ்விரண்டு அஷ்டாதஶ க்ரியாவளிகளுக்கும், க்ரமத்தில் தான் வேறுபாடு உள்ளதே தவிர க்ரியைகள் பெரும்பாலும் ஒன்றாகவே உள்ளன. அதிலும் ஒரு மையக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டே இரண்டு க்ரமங்களிலும் வேறுபாடு காணப்படுகிறது.

அதாவது, முதலில் புதிய பிம்பங்களுக்குரிய சடங்குகளைச் செய்துவிட்டுப் பிறகு யாகஶாலை பூஜை, ஹோமம் போன்றவற்றைச் செய்வது என்னும் அடிப்படையில் ஒரு அஷ்டாதஶ க்ரியாவளீ உள்ளது. முதலில் யாகஶாலை பூஜைகள், ஹோமங்கள் ஆகியவற்றைத் தொடங்கி, பின்பு புதிய பிம்பங்களுக்குரிய ஸம்ஸ்காரங்களைச் செய்தல் என்னும் அடிப்படையில் மற்றொரு அஷ்டாதஶ க்ரியாவளீ அமைந்துள்ளது. அவை இரண்டினையும் இனி காண்போம்.

ஶிவப்ரதிஷ்டா விதி எனும் நூலில் உள்ள அஷ்டாதஶ க்ரியைகள்

𑌅𑌥 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌶𑌿𑌵𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌂 𑌉𑌤𑍍𑌤𑌮𑌂 ।

அஷ்டாத³ஶ க்ரியாவல்யா ம்ருத்ஸங்க்³ரஹண பூர்வகம் ॥

ம்ருத்ஸங்க்³ரஹணகம் வாஸ்துபூஜனஞ்சாங்குரார்பணம் ।
மண்டபே ஶாசபூஜனம் ஹோமகுண்ட³ஸ்ய ஶோத⁴னம் ॥

ஶோஷணஞ்ச ஜலாவாஸம் ஸ்நபனஞ்ச ப்ரத³க்ஷிணம் ।
கௌதுகம் ஶயனம் மந்த்ர ரத்னந்யா ஸாஷ்டப³ந்த⁴னம் ॥

ஜலஸ்நானம் நாத³க்ருதி: விவாஹோஷ்டாத³ஶஸ்ம்ருதா: ।
அஷ்டாத³ஶவிதா⁴னேன ம்ருத்ஸங்க்³ரஹணபூர்விகா ॥

ஶிவப்ரதிஷ்டா² விஹிதா ஶிவாக³மஸமீரிதா ॥

ஶிவலிங்க ப்ரதிஷ்டாவிதி என்ற நூலில் உள்ளபடி அஷ்டாதஶ க்ரியாவளீ

அத² வக்ஷ்யே விஶேஷேண லிங்க³ஸ்தா²பனம் உத்தமம் ।
அஷ்டாத³ஶவிதா⁴னேன ப்ரதிஷ்டா²விதி⁴ருச்யதே ॥

ம்ருத்ஸங்க்³ரஹணம் ஆத்³ய த்³விதீயம் அங்குரார்பணம் ।
ரத்னந்யாஸம் த்ருதீயஞ்ச நயனோன்மீலனம் சது: ॥

பஞ்சமம் ப்ரதிமாஶுத்³தி⁴: ஷஷ்ட²ம் க்³ராமப்ரத³க்ஷிணம் ।
ஜலாதி⁴வாஸனம் ஸப்த ரக்ஷாப³ந்த⁴னம் அஷ்டமம் ॥

நவமம் வாஸ்துபூஜா ச த³ஶமம் பஞ்சக³வ்யகம் ।
ருத்³ரமண்டப ஸம்ஸ்காரம் த்³வாத³ஶம் ஶயனந்ததா² ॥

ஹோமகர்ம த்ரயோத³ஶ்யம் ஸ்தா²பனஞ்ச சதுர்த³ஶ ।
திதி²ஸங்க்²யம் ஸப³ந்த⁴ஞ்ச ஷோட³ஶம் மந்த்ரபூஜனம் ॥

ஸப்தத³ஶம் ததா² நாத³ விவாஹோऽஷ்டாத³ஶம் ப⁴வேத் ।
அஷ்டாத³ஶவிதா⁴னேன ம்ருத்ஸங்க்³ரஹணபூர்வகம் ॥

ஸ்ரீ குருப்யோ நம:

ஶிவாலயங்களில் ஜீர்ணோத்தாரணம்

ஶைவாகமங்கள் ஜ்ஞானம், க்ரியை, யோகம், சர்யை என நான்கு விஷயங்களையும் விளக்கும் நூல்கள் ஆகும். இருப்பினும், கிரியைகளை விளக்கும்போது ஆகமங்கள் தனிப்பெரும் சிறப்புடன் மிளிர்கின்றன. க்ரியை எனப்படும் பூஜையானது, ஆத்மார்த்தம், பரார்த்தம் என இருவகை.

வேறு விதத்தில், நித்யம், நைமித்திகம், காம்யம் என மூன்று வகையாகவும் பூஜையைக் குறிப்பிடலாம்.

“தீக்ஷா சைவ ப்ரதிஷ்டா ச நைமித்திகக்ரியா”

என்ற வசனத்தின் படிப் பார்த்தால், தீக்ஷை, ப்ரதிஷ்டை என இரண்டு க்ரியைகள் மட்டுந்தான் நைமித்திகக் க்ரியைகள் ஆகும். நாமே விருப்பப்பட்டு குறிப்பிட்ட காலங்களில் செய்யும் பூஜை “**காம்யம்**” எனப்படும். இவற்றைத் தவிர உள்ள பிற அனைத்தும் ‘**நித்யம்**’ ஆகும்.

அவற்றுள் தினந்தோறும் ஏற்படும் பூஜைக்கு “**நித்ய நித்யம்**” என்று பெயர். இவற்றைத் தவிர, காலங்களை நிமித்தமாக வைத்துச் செய்யப்படும் பூஜைகளுக்கு “**ஆகந்துக நித்யம்**” என்று பெயர்.

எனவே, ஆகமங்களோ, பத்ததிகளோ, தீக்ஷை, ப்ரதிஷ்டை இவை இரண்டினைத் தவிர வேறு க்ரியைகளை “**நைமித்திகம்**” என்று குறிப்பிட்டால், அதற்கு எல்லாம் “**காலங்களை நிமித்தமாகக்**

கொண்ட **ஆகந்துக நித்யம்**" என்றுதான் பொருள் கொள்ள வேண்டும் எனத் தெளிகிறது.

ப்ரதிஷ்டா - சொல் விளக்கம்

இரண்டு வித நைமித்திகங்களுள் ஒன்றாகிய ப்ரதிஷ்டா என்பதின் சொல் விளக்கம் ஸித்தாந்தஶேகரத்தில் பின்வருமாறு உள்ளது:

" 𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌕𑍇 𑌲𑌿𑌙𑍍𑌗𑍇 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑍇 ।

𑌪𑍀𑌠𑌸𑍍𑌯 𑌵𑌿𑌧𑌿𑌨𑌾 𑌯𑍋𑌗𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾 𑌸𑌾 𑌚 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 ॥"

ப்ரதி=பீடத்தினைக் குறித்து, ஷ்டா (ஸ்தா)= லிங்கத்தினை ஸ்தாபித்தல், ப்ரதிஷ்டா எனப்படும், பீடம் என்பது க்ரியா ஶக்தியை உள்ளடக்கிய மநோன்மணியின் இருப்பிடம். லிங்கம் என்பது ஜ்ஞானஶக்தியை உள்ளடக்கிய ஶிவபெருமானின் இருப்பிடம். இவை இரண்டையும் விதிப்படி சேர்ப்பிப்பது "**ப்ரதிஷ்டா**" எனப்படும்.

ஶைவாகமங்களில் ஶிவபெருமானுக்கு மட்டுமே முக்யத்வம் உள்ளதால், "**ப்ரதிஷ்டா**" என்ற இந்த சொல், ஶிவபெருமான் விஷயத்தில் முக்ய ஶப்தமாகவும், பிற தெய்வாதி விஷயங்களில் கௌணஶப்தமாகவும் இருக்கும்.

ஐந்து வகை ப்ரதிஷ்டா

நாம் இன்று எங்கும் காணும் ஶிவலிங்கங்களின் மையப் பகுதியில், நீண்டு, தண்டு போன்று மழமழவென்று வட்டமாக இருக்கும் பகுதிக்கு லிங்கம் என்று பெயர். வெளியில் நாம் காணும் இந்த லிங்கத்

தண்டானது வட்டமாக இருந்தாலும், உள்ளே மையப்பகுதி எட்டுப் பட்டை வடிவாகவும், கீழ்ப்பகுதி சதுரப்பட்டை வடிவாகவும், இருக்கும். எனவே மூன்று பகுதிகளைக் கொண்ட இந்த தண்டிற்குத்தான் லிங்கம் என்று பெயர்.

இந்த லிங்கத்தினைச் சுற்றி மேடை போன்று உயர்ந்தும், சதுரமாகவோ, வட்டமாகவோ உள்ள ஆவுடையார் என்ற பகுதிக்கு மொத்தமாக பீடம் அல்லது பிண்டிகா என்று பெயர்.

முன்பு சொன்னது போல, லிங்கம் பீடம் ஆகிய இவை இரண்டினையும் சேர்க்கும் இந்த "ப்ரதிஷ்டா" ஐந்து வகைப்படும்.

1.முதல் வகை: ப்ரதிஷ்டா

கர்பக்ருஹத்தின் நடுவில் முதலில் ப்ரஹ்மஶிலாவினை அமைத்து, அதன் நடுவில் அவ்யக்த லிங்கம் அல்லது முகலிங்கம் ஆகியவற்றை நட்டு ஸ்தாபிக்க வேண்டும். பின்பு பீடம் என்ற பிண்டிகையை அதனுள் செறுகி அமைக்க வேண்டும். இது போல் மந்த்ர பூர்வகமாக செய்யப்படும் போது அதற்கு ப்ரதிஷ்டா என்ற பெயர் முழுமையாகப் பொருந்தும். இது முதல் வகை.

2.இரண்டாவது வகை: ஸ்தாபநம்

பாணலிங்க விஷயத்தில், அந்த பாணமானது முன்பு நாம் பார்த்த லிங்கத்தின் மேற்பகுதியாக (ருத்ர பாகமாக) மட்டுமே இருக்கும். அதாவது பாணத்திற்குக் கீழே, எட்டுப் பட்டை, நாலு பட்டை

போன்றவை இருக்க மாட்டா. எனவே ப்ரஹ்மஸிலாவில் நட்டு ஸ்தாபிக்க முடியாது.

எனவே ப்ரஹ்மஸிலாவின் மேல் பிண்டிகையை ஸ்தாபித்து, பிண்டிகையில் உள்ள சிறு குழியில் இந்த பாணத்தினை, அதாவது லிங்கத்தின் ருத்ரபாகமாக மட்டுமே விளங்கும் பாணத்தினை, ஸ்தாபிக்க வேண்டும். இவ்வகையில் பாண லிங்கத்திற்கும் ப்ரஹ்மஸிலாவிற்கும் நேரடித்தொடர்பு இல்லை என்பதையும், லிங்கத்தின் ப்ரஹ்ம விஷ்ணு பாகங்கள், அதாவது நடுப்பகுதி, கீழ்ப்பகுதி ஆகிய இரண்டும் கூட இல்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

எனவே, லிங்கத்தின் ப்ரஹ்ம விஷ்ணு பாகங்களில் வரும் பூஜாதிகள், பிண்டிகையின் பாகங்களிலேயே மானஸிகமாக செய்யப்பட வேண்டும் என்று தெரிகிறது.

பாணலிங்கத்தினைத் தவிரவும், தாதுமயமான லிங்கங்களையும், ரத்னாதிமயமான லிங்கங்களையும் இது போல ஸ்தாபனம் செய்யலாம். இவ்வகைக்கு ஸ்தாபநம் என்று பெயர்.

3.மூன்றாம் வகை: ஸ்திதஸ்தாபநம்

லிங்கம் தனியாக, பிண்டிகை தனியாக, என உருவாக்கப்படாமல், செய்யும் பொழுதே சேர்ந்தாற் போல ஸிவலிங்கம் செய்யப்படலாம். இவ்வகை லிங்கம் ஸ்வர்ணம் முதலிய உலோஹமயமாகவும், வைடூர்யம் முதலிய மணிமயமாகவும், ஸிலாமயமாகவும் இருக்கலாம். அவ்வகை லிங்க விஷயத்தில் லிங்கபாகத்தினையும் பிண்டிகை பாகத்தினையும் சேர்க்க வேண்டிய அவஸ்யமே இல்லை.அவை இரண்டும் சேர்ந்தே உருவாக்கப்பட்டுள்ளன.

இருப்பினும், லிங்கத்தின் ப்ரஹ்ம-விஷ்ணு பாகங்களை மனதினால் கல்பனை செய்து, ஸம்ஸ்காரம் செய்து, லிங்கத்தினையும் பிண்டிகை - யையும் பாவனையாக, மந்த்ரபூர்வகமாக, சேர்ப்பிப்பது ஒரு வகை. இவ்வகைக்கு ஸ்திதஸ்தாபநம் என்று பெயர்.

4.நான்காம் வகை: ஆஸ்தாபநம்

ஶிவலிங்கத்தினைத் தவிர உள்ள தேவீ போன்ற ஶிலைகளை அந்தந்த பீடங்களில் அந்தந்த மந்த்ரங்களுடன் ஸ்தாபித்தல் ஆஸ்தாபநம் எனப்படும்.

5.ஐந்தாம் வகை: உத்தாபநம்

ஜீர்ணமாகுதல் (நாளடைவில் கரைந்து போதல்) போன்ற தோஷங்களுக்குட்பட்ட லிங்கம், ஶிலை போன்றவற்றை சரி செய்தோ, அல்லது அவற்றை அறவே அகற்றியோ புதிய லிங்கம், ஶிலை போன்றவற்றை ஸ்தாபிப்பதற்கு உத்தாபநம் என்று பெயர்.

நாம் எடுத்துக் கொண்ட ஜீர்ணோத்தாரணம் என்ற இந்த விஷயம், ஐவகை ப்ரதிஷ்டாக்களுள் உத்தாபநம் என்ற இவ்வகையைச் சாரும்.

நால்வகை ப்ரதிஷ்டா

ஆகமங்களில் வேறு வகையில் நான்கு விதமாகவும் ப்ரதிஷ்டாவானது விளக்கப்பட்டுள்ளது. அவை 1. **ஆவர்த்த ப்ரதிஷ்டா 2. அநாவர்த்த ப்ரதிஷ்டா 3. புநராவர்த்த ப்ரதிஷ்டா 4. அந்தரித ப்ரதிஷ்டா** என்பனவாகும். இந்த நால்வகை ப்ரதிஷ்டா பெயர்கள்

அனேகமாக அனைத்து ஆகம நூல்களிலும் விளக்கப்பட்டாலும், அவற்றின் பொருளை விளக்கும் விஷயத்திலும், வரிசையிலும் சிற்சில வேறுபாடுகள் ஆகமங்களில் காணப்படுகின்றன. ஸ்ரீமத் காமிகாகமத்தினை அனுஸரித்து அவற்றின் பொருளைப் பார்ப்போம்.

1.முதல் வகை: ஆவர்த்த ப்ரதிஷ்டா

ஆலயம் - லிங்கம் ஆகிய அனைத்தும் முதன் முறையாகப் புதிதாதக் கட்டப்பட்டு மந்த்ரபூர்வகமாக ஸ்தாபித்தால் அதற்கு ஆவர்த்த ப்ரதிஷ்டா என்று பெயர்.

2. இரண்டாவது வகை: அநாவர்த்த ப்ரதிஷ்டா

மந்த்பூர்வகமாக முன்பே ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம், லிங்கம் போன்றவற்றுள் எதற்கேனும் முழுமையாக அழிவு ஏற்பட்டாலோ, பாதிக்கும் மேல் அழிவு ஏற்பட்டாலோ, மறுபடியும் அவற்றினை மந்த்ரபூர்வகமாக ஸ்தாபித்தல் அநாவர்த்த ப்ரதிஷ்டா என்று பெயர். இது இரண்டாவது வகை. முதல் வகை ப்ரதிஷ்டையில் விதிக்கப்பட்ட சில கிரியை இந்த வகை ப்ரதிஷ்டையில் கிடையாது என்பது அதனைக் காட்டிலும் இதற்குள்ள வேறுபாடு ஆகும்.

3.மூன்றாவது வகை: புநராவர்த்த ப்ரதிஷ்டா

ஆலயம் போன்றவற்றின் வண்ணங்கள் அழிந்தாலோ, லிங்கம் போன்றவை சிறிய அளவில் ஊனமுடையதானாலோ, அவற்றை எல்லாம் கூடியவரை சரிசெய்து, ஸம்ஸ்காரம் செய்து ஸ்தாபித்தலுக்கு புநராவர்த்த ப்ரதிஷ்டா என்று பெயர்.

இந்த வகை ப்ரதிஷ்டையில், புதுப்பித்தலின் முறைக்குத் தகுந்தவாறு, முதல் ப்ரதிஷ்டாவில் கூறப்பட்ட க்ரியைகள் இடம் பெறலாம்; இடம் பெறாமலும் இருக்கலாம்.

4.நான்காவது வகை: அந்தரித ப்ரதிஷ்டா

ஆலயம் லிங்கம் போன்றவற்றிற்கு ஸ்பர்ஶதோஷம் போன்ற தோஷம் ஏற்பட்டால் அவை நீங்குவதின் பொருட்டு, ப்ராயஶ்சித்தத்திற்கு நிகராகச் செய்யப்படும் ஸம்ஸ்காரத்திற்கு அந்தரித ப்ரதிஷ்டா என்று பெயர். **'ஶில்பியின் உதவியின்றிச் செய்யப்படும் ப்ரதிஷ்டா இது'** என்பதே முன் சொன்ன மூன்று ப்ரதிஷ்டாக்களுக்கும் இதற்கும் உள்ள முக்கிய வேறுபாடு ஆகும்.

நாம் எடுத்துக்கொண்ட ஜீர்ணோத்தாரணம் என்ற இந்தத் தலைப்பு, மேற்சொன்ன அநாவர்த ப்ரதிஷ்டா, புநராவர்த ப்ரதிஷ்டா ஆகிய இரண்டு வகையிலும் தொடர்பு உடையது. அவ்விரண்டிலும் ஜீர்ணோத்தாரணத்திற்கு வாய்ப்பும் உண்டு.

ஜீர்ணோத்தாரணம்

ஜீர்ணமானவற்றிற்கான உத்தாரணம் ஜீர்ணோத்தாரணம். அதாவது, ஆலயம், விக்ரஹம், லிங்கம் போன்றவை இறைவன் எழுந்தருளுவதற்குத் தகுந்தாற் போல் அமைக்கப்பட்டாலும், அவை காலப் போக்கில் அழியக்கூடியவை அல்லது அழிக்கப்படக் கூடியவை. ஆகையால், அவற்றினைச் சரி செய்வது அவஶ்யமாகிறது. அதுபோன்றவற்றை இருவகையாகச் சரிசெய்யலாம். அதாவது, அவற்றினை அறவே அகற்றி விடாமல், மறுபடியும் ஸந்தாநம் செய்தல்

போன்றவற்றால் சரிசெய்து, ஜீர்ணதோஷத்தினை அகற்றுவது. இது முதல் வகை.

‘**ஸந்தானம் செய்தல்**’ போன்ற நிலையைக் கடந்த பக்ஷத்தில், ஜீர்ணோத்தாரணமும் எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்ற விளக்கம் பல ஆகமங்களில் விளக்கப்பட்டுள்ளது போல, “**ஸ்ரீ நிகமஜ்ஞான ஶிவாசார்யாரால் சந்த்ரிகை என்ற உரையுடன் எழுதப்பட்ட ஜீர்ணோத்தார தஶகம்**” என்ற நூலிலும் பத்து ஶ்லோகங்களில் நன்கு விளக்கப்பட்டுள்ளது. அதனையும் ஒட்டி ஜீர்ணோத்தாரணத்தினைப் பார்ப்போம்.

ஶிவக்ஷேத்ரத்தில் வஸித்தல், ஶிவபக்தர்களைப் பேணுதல், ஶிவனைப் பூஜித்தல், ஶிவாலயம் நிர்மாணித்தல், ஶிவாலய ஜீர்ணோத்தாரணம் செய்தல் ஆகிய ஐவகை ஶிவஸேவைகளுள் ஶக்திக்கு ஏற்றவாறு அனைத்தையோ, ஒன்றினையோ ஶைவர்கள் அவஶ்யம் செய்ய வேண்டும். அதிலும்

ஜீர்ணாத்³யம் பூஜிதம் ஹந்தி நிஹந்தி தத³பூஜிதம் ।

தஸ்மாத் ஸமுத்³த⁴ரேஜ்ஜீர்ணம் யதா² ஶாஸ்த்ரம் ஸுகா²ய ச ॥

[ஜீர்ணமாயிருத்தல் போன்ற தோஷம் உள்ளவற்றை பூஜித்தல் அழிவினை உண்டுபண்ணும், அது போன்றவற்றை பூஜிக்காமல் இருத்தல் பேரழிவினை உண்டுபண்ணும். எனவே, க்ஷேமத்தின் பொருட்டு, ஶாஸ்த்ரப்படி, அந்த ஜீர்ணமானவற்றை உத்தாரம் செய்ய வேண்டும்.]- என்ற ஸ்ரீமத்-காமிகாகம வசனத்தின்படி ஜீர்ணமானவற்றை அலக்ஷ்யம்

செய்தல் கூடாது. உடனடியாக உத்தாரம் (சரி செய்தல், மேம்படுத்துதல்) செய்தல் வேண்டும் என்பது புலனாகிறது.

முதலில், ஆலயாதிகளுக்கு ஜீர்ணோத்தாரணம், லிங்காதிகளுக்கு ஜீர்ணோத்தாரணம், விக்ரஹங்களுக்கு ஜீர்ணோத்தாரணம் என்று ஜீர்ணோத்தாரணம் மூன்று வகை.

முதல் வகையில்

1. தள வரிசை ஜீர்ணோத்தாரணம்

2. விமானம் ஜீர்ணோத்தாரணம்

3. ப்ராகாரம் ஜீர்ணோத்தாரணம்

4. கோபுரம் ஜீர்ணோத்தாரணம்

5. மண்டபம் ஜீர்ணோத்தாரணம்

6. பரிவாராலயம் ஜீர்ணோத்தாரணம்

7. வாஸ்து (பூமி) ஜீர்ணோத்தாரணம் என ஏழு வகை கூறப்பட்டுள்ளன.

இதுபோல லிங்காதிகளின் ஜீர்ணோத்தாரண வகையில் எட்டு உள் வகைகள் உள்ளன:

1. பிண்டிகா ஜீர்ணோத்தாரணம்

2. மூலலிங்க ஜீர்ணோத்தாரணம்

3. பாலலிங்க ஜீர்ணோத்தாரணம்

4. ஸ்வயம்புலிங்க ஜீர்ணோத்தாரணம்

5. மானுஷலிங்க ஜீர்ணோத்தாரணம்

6. பலிலிங்க ஜீர்ணோத்தாரணம்

7. பலி பீட ஜீர்ணோத்தாரணம்

8. மேற்கூறியவற்றின் இருப்பிடத்தின் ஜீர்ணோத் - தாரணம்.

அடுத்து மூன்றாவதாகிய விக்ரஹ ஜீர்ணோத்தாரண வகையில் ஆறு உள்வகைகள் உள்ளன:

1. கருங்கல் விக்ரஹ ஜீர்ணோத்தாரணம்
2. உலோக விக்ரஹ ஜீர்ணோத்தாரணம்
3. சித்திரம் போன்றவற்றின் ஜீர்ணோத்தாரணம்
4. ஶூலம் போன்றவற்றின் ஜீர்ணோத்தாரணம்
5. நித்யாக்னி குண்ட ஜீர்ணோத்தாரணம்
6. ஸித்தாந்த புஸ்தக ஜீர்ணோத்தாரணம்.

மேற்சொன்னவை முடிந்தவரை விளக்கப் படுகின்றன.

ஜீர்ணமானவைகளாக நாம் மேலே குறிப்பிட்ட அனைத்தும், ஆவர்த ப்ரதிஷ்டையில், தேவதை வஸிப்பதற்கு யோக்யமானவையாக நம்மால் செய்யப்பட்டவையாக இருக்கலாம். அல்லது, தானாகவே அத்தகுதியைப் பெற்றவையாக இருக்கலாம். எனவே ஜீர்ணோத்தார ஸமயத்தில், ஆங்காங்கே எழுந்தருளியுள்ள மந்த்ரவடிவான இறைவனுக்கு ஸ்பர்ஶம் போன்றவற்றால் ப்ரமமோ, அதனால் நமக்கு தோஷமோ உண்டாகாத வகையில்

உத்தாரத்தை (செப்பனிடுதலை, மேம்பாட்டினை) செய்ய வேண்டும்.

எனவே, ஆங்காங்கே உள்ள இறைவனுக்கு, இறைத்தன்மைக்கு, மந்த்ரபூர்வகமான ஸம்ஸ்கா-ரங்களால் பாதுகாப்பினைச் செய்து, பின்புதான் அவற்றின் உத்தாரத்தின் பொருட்டு ஶில்பி கார்யத்தினைச் செய்விக்க வேண்டும். அல்லது ஆங்காங்கே உள்ள இறைவனை, மந்த்ரவடிவான இறைவனை மட்டும், கும்பத்தில் ஆகர்ஷணம் செய்து, பிறகு காலத்தேவைக்குத் தகுந்தாற் போல பாலாயத்தில் சேர்ப்பித்து, பிறகு ஜீர்ணமான அவற்றை உத்தாரம் செய்து, பிறகு அந்த பாலாயத்திலிருந்து அங்கே மறுபடியும் சேர்ப்பிக்க வேண்டும், பெரும்பாலும் எங்கும் இம்முறை ஸமானமாக இருக்கும்.

கர்பக்ருஹத்தில் தளவரிசையில் இறுக்கம் காரணமாக, அல்லது தளர்வு காரணமாக தளம் (தரைவரிசை) சமமற்று இருக்கலாம். அல்லது, பெருச்சாளி போன்றவற்றால் உள்ளே சென்று ஜலம் தேங்கிவிடலாம். இதுபோன்ற ஸந்தர்ப்பத்தில் லிங்கத்தில் உள்ள இறைவனை, மந்த்ரரூபமான இறைவனை, அங்கிருந்து கும்பத்தில் ஆவாஹனம் செய்து, தளவரிசையை சரிசெய்து, பின்பு அங்கே இறைவனை சேர்ப்பிக்கவேண்டும்.

கர்ப்பக்ருஹத்தின் மேல் பகுதியில் வெளியே விமானம் என்று எது தெரிகிறதோ அதற்கும் **"ப்ராஸாத:"** என்று பெயர். உள்ளே விளங்கும்

ஶிவலிங்கம் '**ஆன்மா**' என்றும், வெளியே காணும் விமானம் '**ஶரீரம்**' என்றும் பாவனை செய்ய ஶாஸ்திரம் கூறுகிறது.

ஶரீரமாகிய ப்ராஸாதத்தில் விரிசல், வெடிப்பு, உடைந்து விழுதல், எரிதல் போன்றவற்றால் அங்கங்களில் வைகல்யம் ஏற்பட்டால் அந்தந்த த்ரவயங்களாலேயே, முன்பிருந்தபடியே சரிசெய்ய வேண்டும். வேறுபடி செய்தால் தோஷம் கூறப்பட்டது.

"முன்பிருந்த திரவ்யங்களைக் காட்டிலும் உயர்ந்த திரவியங்களால் கூட உத்தாரம் செய்யலாம்" என்று சில இடங்களில் விகல்பம் (choice)கூடக் கூறப்பட்டுள்ளது.

ஆனால் அதன் அமைப்பு முன்படியேதான் இருக்க வேண்டும். விமானத்தின் சிற்சில அங்கங்கள் ஜீர்ணமானால் உத்தாரம் செய்ய வேண்டிய தேவை இல்லை என்று **க்ஷந்தவ்யாம்ஶ:** (பொறுத்துக் கொள்ள வேண்டிய அளவு) கூறப்பட்டுள்ளது. விமானம் முழுவதுமாக அகற்ற வேண்டியது அவஶ்யம். அதற்காக அவ்விமானத்தின் மந்த்ர தேவதைகளை, பாலாலயத்திலுள்ள விமானத்திலும், மூலலிங்கத்தினை வேறு இடத்தில் பாதுகாப்பாக வைத்தபின், அவ்விமானத்தினை அப்புறப்படுத்தி, மறுபடியும் புதிய விமானத்தினை அமைக்க வேண்டும்.

இதுபோன்ற ஸந்தர்ப்பத்தை உத்தேஶித்து ஆகமாதிகளில் ஒரு வாக்கியம் காணப்படுகிறது.

"**ஸ்தாபிதம் ஊர்த்வலிங்கம் வாபி ஶிவலிங்கம் ந சாலயேத் ।**" என்றும், "**ஶைலம் ஸ்தாபயேல்லிங்கம்**

ஸஹஸ்ரேண து சாலயேத் ।" என்றும் சொல்லப்பட்டுள்ளது. அதாவது, அனைத்து லக்ஷணங்களுடன் கூடியதாக இருந்தும், பூஜிக்கப்படாத லிங்கம் து:ஸ்திதம் என்று பெயர்படும். ஜீர்ணாதி தோஷமுடையதாயினும் பூஜிக்கப்படுகின்ற லிங்கம் ஸுஸ்திதம் எனப்படும். இரண்டுமே அசைக்கத் தகுந்தவை அல்ல. அதாவது, இரண்டினையுமே அசைக்கக் கூடாது.

இவ்வாறு பொதுவாக ***நிஷேத:*** (தடுத்தல்) செய்யப்பட்டது.சரியான, பலமான காரணமின்றி லிங்கத்தினை அசைத்தால் அது தோஷத்தினை உண்டுபண்ணும் என்று இதனால் பெறப்படும்.

பின்பு இவ்வாறு சொல்லப்பட்டது: "**லிங்கத்தினை முதன் முதலில் ஸ்தாபனம் செய்வதற்கு நூறு போதுமானது, ஆனால் பின்பு அதே லிங்கத்தினை அசைப்பதற்கு ஆயிரம் தேவைப்படுகிறது**" என்று, "**நூறு அல்லது ஆயிரம் என்பதற்கு இங்கு நூறு காரணங்கள் அல்லது ஆயிரம் காரணங்கள் என்று பொருள்**" என்று ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த சிலர் பொருள் கூறுகின்றனர்.

வ்யவஹார ரஹஸ்யமறிந்த சிலரோ, "**ஸ்தாபன ஸமயத்தில் ஸாக்ஷிகளாக நூறு பேர் இருந்தால் போதும்; ஆனால் சலனம் (அசைப்பது) செய்யும் நேரத்தில் ஆயிரம் நபர்கள் ஸாக்ஷிகளாகத் தேவைப்படுகிறார்கள் என்று பொருள்**" என்று கூறுகின்றனர்.

இவ்விரண்டு உரையும் பொருத்தமாக இருப்பினும், ஸித்தாந்தஶேகரம் போன்றவற்றில் "**ஸ்தாபன**

ஸமயத்தில் நூறு ஆஹுதிகள் கூட போதுமானவை; ஆனால் அசைக்கும், (அப்புறப்படுத்தும்) தருணத்தில் ஆயிரத்திற்கும் அதிகமான ஆஹுதிகள் தேவையானவை" என்று விளக்கம் உள்ளது.

எவ்வாறாக இருப்பினும் இது அவஶ்யம் புலப்படும்- அசைத்தல் என்பது எளிதில் நடைபெறுவது கூடாது.

இருப்பினும், க்ஷந்தவ்யதஶா (பொறுத்துக் கொள்ள வேண்டிய நிலை)-யை மீறி ஜீர்ணாதிகள் ஏற்பட்டால்,

"ஜீர்ணாங்கம் வர்ஜிதம் ஹந்தி நிஹந்தி தத்வர்ஜிதம் ।" என்று முன் சொன்ன வசனப்படி, சாலனம் என்ற உத்தாரணம் அவஶ்யம் செய்ய நேர்ந்தால், ஆயிரத்திற்கும் அதிகமான் ஹோமமும் மற்றும் சில வழிமுறைகளும் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன.

அதிலும், மூலலிங்கம், விமானம் போன்றவற்றை அப்புறப்படுத்த நேர்ந்தால், ஈட்டி, கடப்பாறை போன்றவற்றின் உதவியோடு தன் இச்சைப்படி தானாகவே அதனைச் செய்யக்கூடாது. காளைகளின் அல்லது யானையின் உதவியுடன்தான் அந்த உத்தாரத்தை (அப்புறப்படுத்துதலை) செய்ய வேண்டும்.

அதாவது, காளையின் திமில் பகுதியில் கயிற்றின் நுனியைக் கட்டி, கயிற்றின் அடியை லிங்கம் போன்றவற்றில் கட்டி, காளையை எதிர்ப்புறமாக ஓட்டவேண்டும் என்றவாறு உத்தாரம் செய்யும் முறையைக்கூட விளக்குகிறது ஆகமம். ஆகமங்களின்

பொறுப்புணர்வினையும், உயர் சிந்தனையயும் இங்கு நாம் உணர்ந்து இன்புற வேண்டும்.

இவ்வாறு பார்த்துப் பார்த்து, ஆகமங்கள் விஷயங்களை விளக்கினாலும், செல்வத்தினையே பொருளாகக் கொண்டவர்களும், செறுக்குடைய-வர்களுமான சிலர் தன்னிஷ்டப்படி ஈட்டி போன்ற-வற்றால் ஶிவலிங்கத்தினைப் பெயர்த்தெடுப்பதை எவரும் எளிதில் மறக்க முடியாது.

“உண்மையில் மனிதன் லிங்கத்தினை அசைத்தாலும், காளை, யானை போன்ற வற்றாலேயே அது அசைக்கப்பட்டது போல ஆகவேண்டும்: அதனால், அந்த தோஷம் அம் மனிதனுக்கு வரக்கூடாது” என்றல்லவா ஆகமத்தின் கருத்து விளங்குகிறது? எனவே, தன்னிஷ்டப்படி ஜீர்ணோத்தாரணத்தைச் செய்தல் கூடாது.

முன்பு சொன்ன படி, விமானத்தினை முழுவதுமாக அகற்றும் பக்ஷத்தில் கூட, அவற்றில் உபயோகப் படுத்தக் கூடிய கற்கள் போன்றவற்றை எடுத்துக் கொண்டு அவற்றாலும், புதிய பொருட்களாலும் புதிய விமானத்தினை அமைக்க வேண்டும். உபயோகப்படுத்த முடியாத மண்ணாங்கட்டி போன்றவற்றை, ஸமுத்ரம் போன்றவற்றில் விஸர்ஜநம் செய்ய வேண்டும். இடிக்கப்பட்ட பழைய கற்கள் போன்றவற்றிற்கும் மஹத்வம் உள்ளது என்பது இதிலிருந்து தெரிகிறது அல்லவா?

எந்த ஜீர்ணோத்தாரணமாக இருந்தாலும் சரி பழையதைக் காட்டிலும் எவ்வகையிலும் குறைபாடு என்பது கூடாது. இதனை

"**தலாக ஹீநம் ந கதூவஂ கதூவஂயிகம், ஶாஹ**" என்ற பூர்வகாரணத்தின் ஜீர்ணோத்தாரண விதியின் வரியிலிருந்து அறியலாம்.

விமானம், மூலலிங்கம் ஆகிய இரண்டுள் ஒன்றிற்கு ஜீர்ணோத்தாரணம் செய்ய ஏற்பட்டால், இரண்டிற்கும் கலாகார்ஷ்ணம் சேர்த்தே செய்து, பாலாலயாதிகளில் ஸ்தாபனாதிகள் செய்வதே சரி எனத் தோன்றுகிறது.

விமாநம் ஸூமுஜிதஂக்ஷம் ஸக்ஷம் தநூமுஜிதகழ ।

ஸூமும் விநா ந ஸக்ஷஹ ஸக்ஷம் ந ஸூமுஹநா ॥

கஜாஜிஹாவழ கநயொஃ ஹெஷொ நாஸ்தி ஆயொஜிஹ ।

ஸூமும் ஸக்ஷம் ஆயஞுாவி ஸமாகஷஂ யமாவியி ॥ என்ற வாமதேவ பத்ததியின் வரிகள் இவ்வெண்ணத்திற்கு உறுதுணையாக உள்ளன.

இங்கு ஆங்காங்கே உள்ள இறைவனை ஆகர்ஷணம் செய்வது மறுபடியும் இறைவனை அந்தந்த இடங்களில் சேர்ப்பிப்பதன் பொருட்டே என்று பாவிக்க வேண்டும். எனவே, இறைவனின் இந்த ஸங்க்ரம: (இடம் பெயர்தல்) என்பது "**ஸாபேக்ஷ ஸங்க்ரம:**" என்று ஶாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

முன்பு சொன்னது போலவே, ப்ராகாரம், கோபுரம், மண்டபம், பரிவாரக்கோயில் (ஸன்னிதி), வாஸ்து ஆகிய ஐந்தும் ஜீர்ணமானால், அங்கங்கே உள்ள தேவஶக்தியை கும்பத்தில் ஆகர்ஷித்து, பின் அவற்றினை உத்தாரம் (மேம்படுத்துதல்) செய்து, பின்

அந்தந்த தேவதையை அங்கங்கே மந்த்ரப்படி ஸ்தாபிக்க வேண்டும். இவை ஐந்தும் கூட மிக மிக ஶிதிலமடைந்துள்ள பக்ஷத்தில், அறவே அகற்றி, ஆத்யேஷ்டகா ஸ்தாபநம் (அடிக்கல் நாட்டுதல்) முதல் அனைத்தினையும் செய்திடல் வேண்டும். இல்லையேல் சரி செய்தால் போதும்.

அந்தர்மண்டலம், அந்தர்ஹாரம், மத்யஹாரம், மர்யாதா, மஹாமர்யாதா என்ற ஐந்து ப்ராகாரங்களின் ஜீர்ணோத்தார விஷயத்தில், மிகவும் ஶக்தியற்ற ஸந்தர்ப்பத்தில், சில குறிப்பிட்ட ப்ராகாரங்களை வேறு ப்ராகாரங்களுடன் உசிதமாக ஒன்றுபடுத்தி ஜீர்ணோத்தாரம் செய்யும் வழியும் கூறப்பட்டுள்ளது.

அடுத்து, இரண்டாவதாகிய லிங்காதிகளின் ஜீர்ணோத்தாரணத்தைப் பார்ப்போம். லிங்கங்கள் சில ஆகமங்களில் நான்கு வகையாகவும், சிலவற்றில் ஆறாகவும், வேறு சிலவற்றில் ஏழு வகையாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

"ஸ்வயம்பூ: ஶைவிகம் சைவ ஜிவஃம் ஊநுஷ்ழ க்ஷுஷ்டுகுழ ।

க்ஷுஸுாஃம் பாணஜ்ஜீஜு"

என ஏழு லிங்கங்களைக் குறிப்பிடுகிறது ஶ்ரீமத் காரணம்.

"ஸ்வயம்பூ: ஶைவிகம் பாணம் மாணவம் சாஷ்டுகம் தயா ।

ஶிஷஜ்ஜீஜிதிவஃாதழ..."

என்ற வாக்யப்படிக்கு மானுஷலிங்கத்தினைத் தவிர பிறவற்றிற்கு ஶிஷ்டலிங்கம் எனப் பெயர்.

ஶிஷ்டர்களாக விளங்கும் மனிதர்களால் ஸ்தாபிக்கப்பட்டது ஶிஷ்டலிங்கம் என்று காமிகாகமத்தின்படிக்குத் தெரிகிறது.

"ஶிஷ்ஞ்ஜை விஶெஷெண ஞுவாஹொசாவஸநං ந ஹி"

"ஃஸுைரை: ஜ்ுநிஹி: ஷைவை:

தகுவிஜ்ஞி: வ்ரதிஷ்ிதழ ।

•ஜீணூං வாவப்யவா ஹஜ்நං

வியிநாவி ந வாஜுயெகு"

என்றும் உள்ள காரண-காமிக வசனங்களால் என்ன புலப்படுகிறது? என்றால், **"ஸாமான்ய மனிதர்களைத் தவிர மஹான்கள் போன்றோர்களாலோ, ரிஷி, அஸுரர், தேவர், தேவீ போன்றோர்களாலோ ஸ்தாபிக்கப்பட்ட லிங்கங்களுக்கும், ஸ்வயம்பு விற்கும் ஜீர்ண நிலையில் கூட தோஷம் கிடையாது; ஏனெனில் ஶிவபெருமான் அங்கு நித்யவாஸம் செய்கிறார்"** என்று.

மேலே குறிப்பிட்ட லிங்கங்களுக்கும் கூட ஒரு குறிப்பிட்ட அளவு வரை ஜீர்ணமாவதைப் பொறுத்துக் கொள்ளலாம் என்றும் உள்ளது. அவற்றின் சில உறுப்புகள் உடைந்தாலும் கூட தங்கம், வெள்ளி, தாமிரம் போன்றவற்றின் பட்டைகளாலோ, கம்பிகளாலோ அவ்வுறுப்புகளைக் கட்டியும் பூஜிக்கலாம் என்றும் உள்ளது.

